# இலட்சிய வீரர்களுக்கு இரண்டு வாரம்!

## 'சுயராஜ்ய' சர்க்கார் பரிசு

## கருப்புக்கொடி நாள் எதிரொலி

### காராக்கிரகத்தில் கழகக் காளைகள்


திராவிடநாடு

மலர் 9 | 12-11-50 | இதழ் 21

இலங்கை 15 சதம்] [விலை அணா இரண்டு


சென்னைக்கு ஆச்சாரியார் வந்தபோது கருப்புக்கொடி காட்டச் சென்ற பல்லாயிரக் கணக்கான, கழக வீரர்களில் கையில் கிடைத்தோரையெல்லாம் காங்கிரஸ் சர்க்கார் பிடித்துக்கொண்டு போய் சிறையில் போட்டது.

அப்படிப் பிடித்து இழுத்துச் செல்லப்பட்டோரில், வழியே சென்ற பொதுமக்களில் சிலரும் இருந்தனர். அவர்களில் பலர் அப்போதே விடுவிக்கப்பட்டு, சிலர் மட்டும் காவலில் வைக்கப்பட்டிருந்தனர்.

காங்கிரஸ் சர்க்காரால் கைது செய்யப்பட்டு கொண்டுபோய் 24—10—50 முதல் காவலில் வைக்கப்பட்டிருந்த 34 தோழர்களின் வழக்கு விசாரணை 6-11-50 அன்றும் 7—11—50 அன்றும் நடைபெற்றது.

### முதல்நாள் விசாரணை

25—10—50 அன்று, குறிப்பிட்டபடி சென்னை—மூன்றுவது மாகாண மாஜிஸ்டிரேட், கீழ்க்கண்ட தோழர்களின் வழக்கை 6—11—50 அன்று காலை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்.

இன்றைய விசாரணையில் தோழர்கள் ஜி. எஸ். சம்பந்தம், பா. தங்கலிங்கம், கே. ஜயராம், டி. மகாதேவன், எம். சிவலிங்கம், பி. வடிவேலு, கே. ராஜூ, ஆர். வாசுதேவன், பி. சுந்தரம், எஸ். பி. அழகரசு, கே. வி. கே. சாமி, சாந்தமூர்த்தி ஆகிய பன்னிரெண்டு தோழர்களின் வழக்கு முதலில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் கூட்டமாக கூடி நின்று ஆர்ப்பாட்டம் செய்ததாக மேற்படி தோழர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டது. அதை மறுத்து தங்கள் கருப்புக்கொடி காட்டச் சென்றது உண்மைதானென்றும், ஆனால் பொதுஜன இடையூறு ஏற்படும் வகையில் நடந்துகொள்ளவில்லையென்றும் நமது தோழர்கள் சார்பில் எஸ். பி. அழகரசு கூறினார். தங்களையெல்லாம் தனித்தனியாகப் போலீசார் பிடித்தார்களே யொழிய, பன்னிரெண்டு பேரையும் ஒரே இடத்தில் பிடிக்கவில்லையென்றும் அப்படியிருக்கையில் தாங்கள் கூட்டமாகக் கூடி நின்று போக்குவரத்துக்கு இடைஞ்சலூட்டியதாகக் கூறுவது எப்படி உண்மையாயிருக்க முடியும் என்றும் அவர் கேட்டார்.

மாஜி:— நீங்கள் 12 பேரும் ஒரே இடத்தில் இல்லையா?

ப:— இல்லை! தனித் தனியாக நாங்கள் போயிருந்தோம். ஒவ்வொருவரையும் பிடித்து லாரிகளில் ஏற்றினார்கள். எங்களைக் கைது செய்தது, இதோ நிற்கும் சப்-இன்ஸ்பெக்டர் அல்ல. அசிஸ்டெண்ட் கமிஷனரும், இன்னும் வேறு சிலருமே எங்களைக் கைது செய்தார்கள்.

மாஜிஸ்டிரேட், சர்க்கார் சார்பில் வந்திருந்த சப்-இன்ஸ்பெக்டர் பக்கம் திரும்பி, "மொத்தமாக ஒரே இடத்தில் இவர்களைக் கைது செய்தீர்கள்?" என்று கேட்டார்.

அவரும் 'ஆமாம்' என்று கூறவே, மேலும் தொடர்ந்து மாஜிஸ்டிரேட் நமது தோழர்களைக் கேட்டதாவது.

மாஜி:- நீங்கள், போக்குவரத்துக்கு தடங்கல் செய்ததாகக் கூறப்படுகிறது. இனிமேல் அப்படி செய்யாமலிருக்கிறீர்களா?

பதில்:- இல்லை! நாங்கள் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொள்ளவில்லை. கருப்புக் கொடி காண்பிக்கவே போனோம். அதைக் காட்டக்கூட விடவில்லை! பகல் 3 மணிக்கே எங்களை, ஒவ்வொருவராக, நாங்கள் போய்க்கொண்டிருந்த போது பிடித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

மா:- கருப்புக்கொடி பிடிக்க அன்று எவ்வளவு பேர் வந்திருந்தார்கள்!

ப:- ஏராளமாக வந்திருந்தார்கள்.

மா:- அப்படியானால் அது போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவித்ததாகத் தானே அர்த்தம்?



கோட்டை வெளியில், மக்கள் அமைதியோடு கருங்கொடியுடன் 24-10-50-ல் நின்ற காட்சி. இவர்களைத்தான் மிருகத்தனமாகத் தாக்கிச் சின்னாபின்னப்படுத்தினர், 'சுயராஜ்ய சர்க்கார்'!

ப:- அதெப்படி? நாங்கள் அப்படிச் செய்யவில்லையே!

மா:- நீங்கள் சொல்வதற்கு ஆதாரமாக சாட்சிகள் உண்டா?

ப:- சாட்சிகள் இல்லை. நாங்கள் வாதாடவும் விரும்பவில்லை. ஆனால் நாங்கள் கருப்புக்கொடி காட்டப் போனோம்—போக்குவரத்துக்கு இடையூறு வருமாறு நாங்கள் நடந்துகொள்ளவில்லை.

மா:- சரி, இது முதல்தடவையாக இருப்பதால், உங்களை மன்னித்துவிட்டுவிடுகிறேன். இனி மேல் இப்படியெல்லாம் செய்யாமலிருக்கிறீர்களா?

ப:- கருப்புக்கொடி காட்டவேண்டும் என்பது எங்கள் கழகத்து முடிவு. அதையொட்டியே நாங்கள் கருப்புக்கொடி காட்டச்சென்றோம். பிறருக்கு இடைஞ்சலில்லாமல், அமைதியாக எங்களது அதிருப்தியைக் காட்டிக்கொள்ளவே கருப்புக்கொடி பிடிப்பதென எங்கள் கழகம் முடிவு செய்திருக்கிறது. வடநாட்டு மந்திரி, யார் வந்தாலும் நாங்கள் கருப்புக் கொடி பிடிப்போம்! அமைதியான முறையில் நாங்கள் கருப்புக்கொடி பிடிப்போம்!!

மாஜி:- இந்தியாவில் எல்லோரும் ஒன்றுதானே! இதென்ன, வடநாடு — தென்னாடு? இப்படியெல்லாம் யார் உங்களுக்குச் சொல்லித்தருகிறார்கள்?

பதில்:- திராவிட முன்னேற்றக் கழகம்! எங்கள் சொந்தக் கழகம்!!

குன்றத்தூர் கொடுமையின்போது, மக்களைச் சுட்டதுமட்டுமின்றி கையில் சிக்கிய கழகத் தோழர்களையெல்லாம் அடித்து, கைது செய்து இழுத்துச் சென்றிருக்கின்றனர். அப்படி கைது செய்யப்பட்ட தோழர்களில் பலரை மற்றொர் விலங்கிட்டு வீதி வழியே கொண்டு சென்றனராம். ஒரு நாட்டின் விடுதலைப் பட்டாளத்து வீரர்கள் கையிலே — விலங்கு! சாதாரண கிரிமினல் கைதிகளைவிட மோசமாக நடத்தியிருக்கிறார்கள். தாங்கமுடியாத கொடுமை! சகிக்க இயலாதகாட்சி! பொறுக்கமுடியாத சம்பவம்!!

**இதுதானு சுயராஜ்யம்**

மேற்படி பதிலைக் கேட்டதும், மாஜிஸ்டிரேட் தனது ஒவ்வொருவருக்கும் இரண்டுவாரம் சிறைவாசத் தண்டனை அளித்திருப்பதாகத் தீர்ப்புக்கூறினார்.

'மிகவும் மகிழ்ச்சி, வணக்கம்' என்று பணிவோடு சிறைத்தண்டனையை ஏற்று கழக வீரர்களான எட்டுபேரும் சென்றனர்.

குற்றஞ்சாட்டப்பட்ட பன்னிரண்டு தோழர்களில் நால்வர், தாங்கள் ரோட்டில்சென்றுகொண்டிருந்ததாகவும் தாங்கள் கருப்புக்கொடி காட்டப் போகவில்லையென்றும் இருந்தும் தங்களைப்போலீசார் பிடித்துச் சென்றதாகவும் கோர்ட்டில் தெரிவித்துக்கொள்ளவே, அவர்களை மாஜிஸ்டிரேட் விடுதலை செய்தார்.

### அடுத்த 'படை!'

அடுத்து, தோழர்கள் காஞ்சி கே. டி. எஸ். மணி, வி. பரமசிவம், கே. வடமலை, கே. பி. கணபதி, எம். சாதாகிருஷ்ணன், அப்துல்லா, ஆர். டி. சாமி, பி. லோகநாதன், ஜி. கன்னியப்பன், பி. கே. கபாலி ஆகிய பத்துத் தோழர்களின் வழக்குவிசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்குத் துவக்கத்திலேயே ஒருவர், தான் ராயப்பேட்டை வழியே வழக்கம்போல சென்றுகொண்டிருந்ததாகவும், அதுபோது தன்னை போலீசார் பிடித்துச் சென்றுவிட்டதாகவும், தான் கருப்புக்கொடி பிடிக்கச் செல்லவில்லை என்றும் கூறிக்கொண்டார்.

மேற்படி தோழர்கள் பத்துபேரும் ராயப்பேட்டை ஐரோடும், [illegible]ரோடும் சந்திக்குமிடத்தில் நின்றுகொண்டு ஆபாசமான வார்த்தைகள் மூலம் ஒழுக்கீனமாக நடந்துகொண்டதோடு கற்களை வீசியதாகவும்—கருப்புக்கொடியை வீசி காட்டக் கூட்டமுயன்றுகொண்டிருந்ததாகவும் சர்க்கார் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

போலீஸ் இன்ஸ்பெக்டர் சாட்சியமளித்தார்.

மாஜி:- எப்பொழுது இவர்கள் மேற்கண்டவற்றையெல்லாம் செய்தார்கள்.

எஸ். ஐ:- ராசகோபாலாச்சாரியார் இங்கு [illegible] போது.

மாஜி:- எங்கே?

எஸ். ஐ:- இந்திய அதிகாரிகள் [illegible] அவர் வந்தபோது.

என்று கூறிவிட்டு, தாம்தான் [illegible] செய்ததாகவும், அவர்கள் வைத்திருந்த [illegible]

(5-ம் பக்கம் பார்க்க)

# பகிரங்க விசாரணை வேண்டும்!

## கருப்புக்கொடி—அடிப்படை உரிமை

### 'பிரசண்ட விகடன்' கண்டனம்

குன்றத்தூர் கொடுமை குறித்தும், சென்னை தடியடி தர்பார் சம்பந்தமாகவும், சென்னை 'பிரசண்ட விகடன்' தீட்டியிருக்கும் கருத்துரை.

•மேற்படி சம்பவங்களைக் குறித்து, "உயர் நீதிபதிகளைக் கொண்ட விசாரணை நடத்தப்பட வேண்டும்" என்று நேர்மையோடு, தேசிய இதழான 'பிரசண்ட விகடன்' வலியுறுத்துகிறது.

"அண்மையில், சென்னைக்கு விஜயம்செய்திருந்த மத்திய சர்க்கார் அமைச்சர் ஸ்ரீ இராசகோபாலாச்சாரியாருக்குக் கறுப்புக் கொடி காட்ட வந்திருந்தவர்களையும், பொது மக்களையும், தடியடிப் பிரயோகம் செய்து போலீஸார் கலைத்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. மத்திய அரசாங்க அமைச்சர்களுக்குக் கறுப்புக்கொடி பிடிப்பதென்று திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டில் முடிவு செய்திருக்கிறார்கள். இதன்படி ஏற்கனவே மத்திய விளம்பர அமைச்சர் ஸ்ரீ திவாகர் சென்னைக்கு வந்திருந்தபோது கறுப்புக் கொடி காட்டப்பட்டிருக்கிறது. இவ்விதம் ஸ்ரீ திவாகருக்கு அமைதி வழியில் நின்று கறுப்புக்கொடி காட்டியவர்களே, ஸ்ரீ இராசகோபாலாச்சாரியாருக்கும் கறுப்புக்கொடி பிடிக்க முற்பட்டிருக்கிறார்கள், கறுப்புக்கொடி பிடிக்க வந்தவர்களைக் கலைந்து போகும்படி போலீஸார் கேட்டுக் கொண்டதாகவும், அவர்கள் கலைய மறுத்ததால் தடியடிப் பிரயோகம் நடந்ததென்றும் சொல்லப்படுகிறது. இத் தடியடிப் பிரயோகத்தின் பயனாக, பலர் படுகாயமடைந்திருக்கிறார்கள் என்றும் தெரிகிறது.

கறுப்புக்கொடி காட்ட வந்தவர்கள் அமைதிக்கும் ஒழுங்கிற்கும் கட்டுப்பட்டுத் தங்கள் அதிருப்தியைக் காட்டுகிறார்களா என்பதையே தான் போலீஸ் முக்கியமாகக் கவனித்திருக்க வேண்டும். அதற்கு மாறாக, ஒருவிதக் காரணமும் இல்லாமல் அவர்களைக் கலைந்து போகச் சொன்னதின் கூற்றை நாம் புரிந்துகொள்ள முடியவில்லை. ஒரு ஜனநாயக நாட்டில், அரசாங்கத்திடம் மக்கள் தங்களுக்குள்ள அதிருப்தியைக் காட்டுவதற்கு அமைதியான முறையில் கிளர்ச்சி செய்வதை, ஆர்ப்பாட்டம் நடத்துவதை யாரும் குற்றம் என்று சொல்லமாட்டார்கள். இந்த உரிமைகள்கூட இல்லாவிட்டால், அதை ஜனநாயக ஆட்சி என்று சொல்வதற்கும் முடியாது. உலகம் ஒப்புக்கொண்ட அடிப்படை உரிமைகளில் மேற்கண்ட கிளர்ச்சிகளுக்கு இடம் தரப்பட்டிருக்கிறது. நம்முடைய இந்திய அரசியல் சட்டமும் அவ்வுரிமைகளை மக்களுக்கு வழங்கி யிருக்கிறது. இப்படியெல்லாம் இருந்தும்கூட, சென்னை ஆட்சியாளர், தடியடிப் பிரயோகம் நடத்தி மக்கள் உரிமைகளைப் பறித்திருப்பதற்காக நாம் உண்மையில் வருந்துகிறோம்.

தடியடிப் பிரயோகம் நடத்திய 3 நாளைக்குப் பிறகு, சென்னையை அடுத்துள்ள குன்றத்தூரில், துப்பாக்கிப் பிரயோகம் நடந்து, பலர் படுகாயமடைந்திருப்பதாகச் செய்தி வந்திருக்கிறது. இத் துப்பாக்கிப் பிரயோகம், கூட்டங்களுக்குப் போட்டிருந்த 144 தடை உத்தரவை எதிர்த்து தி. மு. கழகத்தார்கள் கூட்டம் கூட முயற்சித்ததின் விளைவாக ஏற்பட்டது என்று தெரிகிறது. கூட்டங்களுக்குத் தடை உத்தரவு போடுவது, பிரிட்டிஷ் ஆட்சியைவிட காங்கிரஸ் ஆட்சியில் அதிகமாகிக்கொண்டு இருக்கிறது. சுதந்திரம் வந்தது முதற்கொண்டு ஏறக்குறைய மக்கள் போலீஸ் ஆட்சியிலிருக்கும் நிலைமையிலேயே இருந்து வருகின்றனர். மிக நெருக்கடியான சமயங்களில் அன்றி மற்றச் சமயங்களில் கூட்டங்களுக்குத் தடை போடுவது ஜனநாயகத்துக்கு எதிரான பாசிசக் கொள்கையாகும். துப்பாக்கி, தடியடிப் பிரயோகங்களுக்கு, வழக்கம்போல் போலீஸ், மக்களில் சிலர் கல்லெறிந்தார்கள் என்ற கதையையே திரும்பப் படித்திருக்கிறது. ஏற்கனவே இது மாதிரி காரியங்களில் நடந்த விசாரணைகளின் போது, போலீஸின் கூற்று மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. இப்போது நடந்த தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் பற்றி விசாரணை நடத்தினால், போலீஸின் கூற்று எந்த அளவுக்கு உண்மை என்பது வெளியாகிவிடும். ஆனால் இவ்விசாரணை உயர் நீதிபதிகளைக் கொண்டு நடைபெற வேண்டுவது மட்டும் முக்கியமாகும்.

இந்தியாவில் ஆட்சி மாறி யிருக்கிறதே தவிர, போலீஸின் மனப்பான்மை இன்னும் மாறவில்லை என்பதற்கு இதுபோன்ற எத்தனையோ சம்பவங்களை நாம் எடுத்துக்காட்ட முடியும். போலீஸ் மனப்பான்மை மாறாததற்கு, காங்கிரஸ் ஆட்சியாளர்களே. தாம் பொறுப்பாகும். மக்களிடத்தில் பொறுப்பும், தன்னடக்கமும் கொண்டு நடந்துகொள்ள வேண்டியது போலீஸின் முக்கிய கடமையாகும். இதை மற்ற நாடுகளில் நாம் பார்க்க முடிகிறது. ஆனால் நம் நாட்டில், ஆட்சி நம்மவர் கைக்கு வந்தும், போலீஸுக்கு இந்த மனப்பான்மை ஏற்படாமலிருப்பதற்குக் காரணம், போலீஸ் நிர்வாகத்தில் தலைகீழான மாறுதல் இல்லாததுதான் என்பது தெரியவரும். இனியேனும் இத்துறையில் கவனம் செலுத்துவார்களென்று நம்புகிறோம்.

சென்னையில் நடந்த தடியடி, துப்பாக்கிப் பிரயோகம் பற்றி அரசாங்கம் ஒரு விசாரணைக் குழு ஏற்படுத்த வேண்டுமென நாம் கேட்டுக் கொள்ளுகிறோம்.

—☼—

## பித்தலாட்டப் போக்கு

✻

### சிற்றரசு—ஆசைத்தம்பி அறிக்கை

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஆயுத பூசையில் நாங்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றியதாக சு. மி. பத்திரிகையில் வந்த செய்தியை வைத்து, "விடுதலை" இதழ், வெளியூர் 2-11-50 அன்று முன்னேற்றக் கழக வீரர்கள், கொள்கைக்கு மாறாக நடக்கும் விந்தையைப் பாருங்கள், என்று கிண்டலாக எழுதியிருக்கிறது.

அற்ப மகிழ்ச்சியை மனதில் எண்ணி, சிந்திக்கவும் துணியாது 'வழக்கம் போல', இந்தச் செய்தியை விடுதலையார் வெளியிட்டிருக்கிறார்.

சுதேசமித்திரன், விடுதலை இதழ்கள் வெளியிட்டிருப்பது போல நாங்கள் நடக்கவில்லை. மாடர்ன் தியேட்டர்ஸ் ஊழியர் கழக 15-வது ஆண்டு விழாவில்தான் பங்கெடுத்துக்கொண்டு, சொற்பொழிவாற்றினோம்.

அருவருக்கத் தக்க முறையில், பித்தலாட்டமான வகையில் நடப்பது தேசிய இதழ்களின் பாரம்பரைப் பழக்கம். அதே பாதையில் 'விடுதலை' யாரும் நடப்பது பரிதாபம் நிரம்பிய—தற்கொலைக் காட்சி!

சேலம்,
2—11—50.

சி. பி. சிற்றரசு
எ. வி. பி. ஆசைத்தம்பி

# சட்டத்தை மீறிய கொடுஞ்செயல்

## தடியடியால் இயக்கம் வளரும்

### சென்னை தர்பார் - 'சண்டே அப்சர்வர்' கண்டனம்

சென்னையில், ஆச்சாரியார் வந்தபோது நடைபெற்ற தடியடி தர்பாரைக் கண்டித்து, சென்னை 'சண்டே அப்சர்வர்' தீட்டியிருக்கும் தலையங்கத்தின் பகுதிகள்.

"சில நாட்களுக்கு முன்னால் ராஜாஜி, பொறுப்பு இருந்ததோ இல்லையோ, மத்தியசர்க்காரின் மந்திரியாக சென்னைக்கு வந்திருந்தார். நகரில் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவேண்டியிருந்தது. அவர் இங்கு வந்திருந்தபொழுது, திராவிட முன்னேற்றக் கழகத்தினர், பாசிச ஆட்சியான வடநாட்டு மத்திய சர்க்காரிடம் தென்னாட்டு மக்கள் அதிருப்தி கொண்டுள்ளார்கள் என்பதைத் தெரிவிக்க, மத்திய சர்க்காரின் மந்திரிகள் வந்தால், இந்தமாகாணத்தின் எல்லைக்குள் நுழையும்பொழுது அவர்களைவரவேற்கக் கூடாது, கருப்புக் கொடிகளைக் காட்டவேண்டும் என்று அவர்களின் மாநாடொன்றிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி, கருப்புக்கொடி காட்டக் குழுமியிருந்தனர். அவர்கள் அம்மாதிரி செய்ய முடியாமல் தடுக்கப்பட்டது மல்லாமல், போலீசார் தடியடியும் தந்தனர்—வேட்டையாடி விரட்டினர். தடியடிக் கோரத்தைப் பார்த்தவர்கள், அது மிகவும் மிருகத்தனமான முறையிலிருந்தது என்று கூறுகிறார்கள். 'இந்து' பத்திரிகை கூறுவதுபோல, மக்கள் பிரம்புகளால் அடி வாங்கவில்லை—போலீஸ் துணைக் கமிஷனர் திரு. கிருஷ்ணன் நாயர் தலைமையில் அடிப்பதில் பெயர்பெற்ற மலபார் போலீசாரினால் தடியடி தரப்பட்டு விரட்டப்பட்டனர். கூட்டத்திலே இருந்த பொறுப்பற்ற ஓரிருவர், போலீசாரின் கொடுமை தாங்காமல், ஆத்திரமடைந்து, சில கற்களை வீசியிருக்கலாம். கமிஷனரின் மீதும் பட்டிருக்கலாம். ஆனால் அது ஒன்றே, மக்களை, வெறிநாய்களைப்போல அடித்து விரட்டப் போதுமான காரணமாகிவிட முடியாது!

அன்று ராயப்பேட்டையில் கருப்புக்கொடி காட்ட வந்தவர்கள் அடித்து விரட்டப்பட்டதோடு மட்டுமல்ல, பொதுமக்கள் மீதும் தடியடி நடத்தியிருக்கிறார்கள். ராயபேட்டை பெருவீதியில் மக்கள் நடமாடக்கூட அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் வழியிலே நிறுத்தப்பட்டு, சோதனை செய்யப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டனர். குடையெடுத்துச் சென்ற மனிதர் ஒருவரும் அவ்வழி நடக்க அனுமதிக்கவில்லை. பிரபல சினிமா நட்சத்திரம், மதிப்பிற்குரிய தோழர் கே. ஆர். இராமசாமி போன்றவர்களையும் போலீஸ் சட்டப்படி காரிலே சென்றுகொண்டிருக்கும் பொழுது கூடக் கைது செய்தனர்.

ராஜாஜி நம்மவர்—நம் நகரத்தைச் சேர்ந்தவர். அண்மையில் சென்னை வந்து திரும்பிய ஆர். ஆர். திவாகருக்குக் கருப்புக் கொடி காட்ட அனுமதித்ததுபோல், இப்பொழுதும் செய்திருந்தால் அவருக்கு ஒன்றும் ஏற்பட்டிராது! திவாகர் அதனைப் பெருந்தன்மையோடு ஏற்றுக்கொண்டார் ஆனால் ராஜாஜி, நம் நாட்டவர், கருப்புக்கொடிகளைகாண்பதற்கே கூசினாரென்றால் இது அறிவுடைமையாகாது. சில அரசியல் இயக்கங்கள் மத்தியசர்க்காரின் மந்திரிகளுக்கு, மத்திய மந்திரிசபையின்மீது தங்களுக்குள்ள வெறுப்பின் அடையாளமாகக் கருப்புக்கொடிகளை காட்ட முற்படுகின்றன என்றால், அந்த மந்திரிகளோ, நாட்டின் சட்டத்தையும், ஒழுங்கையும் காப்பாற்றும் பொறுப்பிலே உள்ளவர்களோ ஆத்திர உணர்ச்சியை அடைந்துவிடக்கூடாது. தடியடிகளால் அந்த இயக்கத்தின் வளர்ச்சிக்கே வழி கோலுகிறார்கள்.

அவர் ராயப்பேட்டைக்கு இந்திய ஆபீசர்கள் கழகத்திற்கு சர். கே. பி. இலட்சுமணராவ்படத்தைத் திறந்து வைக்கச் சென்றபொழுது, ராயப்பேட்டை தெருக்கள் மக்கள் நடமாட்டமே இல்லாத பாலைவனமாகக் காட்சியளித்தது நமக்குத் தெளிவாகத் தெரிய வருகிறது. இம்மாதிரி சம்பவங்கள் அடிக்கடி நிகழுமானால், ஆளுவோர் மீது மக்களின் கோபம் வளரும். நம்மைப் பொறுத்தமட்டில் எந்த மந்திரியையும் புண்படுத்த விரும்பவில்லை. எந்தத் தனிப்பட்டவரையும், அவர் மந்திரியானாலும், யாரானாலும் மனம் நோகச் செய்ய விரும்பவில்லை. அரசியல் கட்சித்தலைவர்களுக்குச் செய்யப்படுகிற சிறுமைகளை பெரிதாக்கிடும் பத்திரிகைகளின் பட்டியலிலே நாம் இடம் பெற விரும்பவில்லை. முஸ்லீம்லீக் தலைவர் தோழர் இஸ்மாயிலையே உதாரணத்திற்காக எடுத்துக்கொள்வோம். அவர் மலபாருக்குச் சென்றிருந்தபொழுது தேசிய முஸ்லீம்கள் கருப்புக்கொடிகளால் அவரை வரவேற்றனர் என்று கேள்விப்பட்டோம். இந்நிகழ்ச்சிகளைத் தமிழ்ப் பத்திரிகைகள் பிரமாதப் படுத்தின. இந்நாட்டின் ஒரு பகுதியிலே, கருப்புக் கொடியால் வரவேற்பது அனுமதிக்கப்பட்டால், நாட்டின் தலைநகரிலே மட்டும் மறுக்கப்படுவானேன்? ஒழுங்கின் பேரால், நாட்டின் சட்டதிட்டங்களின் பேரால், போலீசாரின் சட்ட வரம்பு கடந்த போக்கை எதிர்க்கிறோம்.

# குன்றத்தூர் கொடுமை—எங்கும் கண்டனம்

## சென்னை தடியடி—மக்கள் ஆத்திரம்

### "அடக்குமுறை ஆணவம் ஒழிக!"

"24—26" தேதிகளில் சென்னையிலும், குன்றத்தூரிலும் நடைபெற்ற மிருகத்தனமான கொடுமைகள் குறித்து, நாடெங்கும் கண்டனம் எழுப்பியிருக்கிறது. ஆங்காங்குள்ள திராவிட முன்னேற்றக் கழகங்கள் "பகிரங்க விசாரணை வேண்டும்" என்று தீர்மானித்து, சென்னை முதன் மந்திரியாருக்கு அனுப்பியுள்ளன. கண்டனத் தீர்மானங்கள் அனுப்பிய நமது கழகங்களின் செய்திகள் குவிந்துகொண்டுள்ளன. அவைகளில் சில, இதோ.

சென்னை சர்க்கார் போக்கை வெறுத்துக் கண்டனக் குரல் எழுப்பிய தனிப்பட்ட கழகங்களின் செய்திகள் பலவற்றில் சிலவற்றைச் சுருக்கித் தந்துள்ளோம். பிற, பின்பு.

**பஞ்சாலைத் தொழிலாளர்**

1—11—50ல் மேட்டூர் அணை (சேலம்கேம்ப்) பஞ்சாலைத் தொழிலாளர் சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் உபதலைவர் தோழர் கே. காளியப்பன் தலைமையில் நடந்தது.

அப்பொழுது கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

24—10—50ல் இந்தியக்குடியரசு ராஜாங்க மந்திரி சி. இராசகோபாலாச்சாரியார் சென்னை வந்தபொழுது மிலேச்சத்தனமான முறையில் தடியடிப்பிரயோகம் செய்ததைக் கண்டிக்கிறோம்.

26—10—50ல் குன்றத்தூரில் தி. மு. கழகத்தின் பொதுக்கூட்டத்தின்பொழுது இரக்கமற்றமுறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து தொண்டர்கள், தோழர்கள் என். வி. நடராசன் போன்ற தலைவர்கள் உள்பட ஆண், பெண்கள் என்ற வேறுபாடின்றி அவதிக்குள்ளாக்கிய சர்க்காரின் செய்கையை கண்டிக்கிறோம்.

இச்சம்பவத்தினை பகிரங்க விசாரணைக்குக் கொணர்ந்து, குற்றமிழைத்த அதிகாரிகளுக்கு தகுந்த தண்டனை வழங்கவேண்டுமென்றும், இனி மேலாவது இம்மாதிரியான அக்கிரமச் செயல்கள் நடைபெறாது பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் நிர்வாகக்குழு சென்னை சர்க்காரைக்கேட்டுக் கொள்கிறது.

மேற்படி சம்பவங்களில் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும், வீரவணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

**தோழமைக் கழகத்தார்**

சென்னை, சிந்தாதிரிப் பேட்டை தோழமைக் கழகத்தார் காங்கிரஸ் ஏகாதிபத்தியத்தின் அநாகரீகப் போக்கைக் கண்டித்துள்ளனர்.

29—10—50-ல் கூடிய நிர்வாசக் குழுக் கூட்டத்தில் ஆச்சாரியார் சென்னை வந்தபொழுது பொதுமக்கள் மீதும் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள்மீதும், மிகவும் கடுமையான முறையில் தாக்கிய நிகழ்ச்சியைக் கண்டு தோழமைக் கழகம் சர்க்காரின் மிருகத்தனமான போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது என்றும், குன்றத்தூரில் 144 சட்டத்தை மீற முயன்ற ஒரே காரணத்திற்காக எட்டுமுறைகள் சுட்டு மிகவும் கேவலமான முறையில் போலீசார் நடந்ததையும் தோழர்கள் கைதுசெய்யப்பட்டதையும் அறிய நாம் வருந்துவதுடன் அத்தகைய போக்கு ஜனநாயகத்திற்கு முரணானது என்பதையும் ஆளவந்தாருக்கு அறிவிக்கின்றோம் என்றும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கொழும்பு திராவிடர்**

29—10—50 ஞாயிறு மாலை 4-30 மணிக்கு பழைய சோனகத்தெரு 31-ம் எண்ணுள்ள இடத்தில் கொழும்பு திராவிடர்கள் ஒன்று கூடினர். தி. மு. க. சார்பில் நடந்த பொதுக் கூட்டத்திற்கு தோழர் மா. இராசாமணி தலைமை வகித்தார்.

தோழர் குலசேகரன் 24—10—50-ல்சென்னைக்கு வந்த இந்தியக் குடியரசு மந்திரி சி. இராசகோபாலாச்சாரியாருக்கு அமைதியான முறையில் கருப்புக் கொடிகளை காட்டி, தென்னாட்டார் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் மீது கொண்டுள்ள வெறுப்பையும், அதிருப்தியைக் காட்டக்கூடிய திராவிடப் பெருங்குடி மக்கள் மீது சென்னை அரசாங்கம் ஈவிரக்கம் துளியுமின்றி தடியடிப் பிரயோகம் செய்தும், சிறைப்படுத்தியும் கொடுமைக் கூத்தாடியதை வன்மையாகக் கண்டித்துப் பேசினார். பிறகு அதனையே தீர்மானமாகவும் நிறைவேற்றப்பட்டது.

**மேலப்பழூர்**

26—10—50-ல் செயலாளர் எம். ஆர். செல்லப்பா தலைமையில் கூடிய செயற்குழு கூட்டத்தில், சென்னையில் கருப்புக்கொடி காட்டி, தங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கச் சென்ற மக்களை தடியாலடித்துத் துன்புறுத்தியதையும், எழுத்துரிமையை நிலைநாட்ட குன்றத்தூரில் கூடியிருந்த மக்களை துப்பாக்கியால் சுட்டதையும் கண்டித்தும், அடிபட்டும் காயமடைந்தும் இந்த ஆட்சியாளரின் அடக்குமுறைக்குப் பலியான தியாகிகளையும், சிறைக்குச் சென்ற தீரர்களையும் பாராட்டியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**செங்கோட்டை**

27—10—50-ல் நடந்த தி. மு. க பொதுக் கூட்டத்தில் சென்னையில் நடந்த தடியடி தர்பாரைக் கண்டித்து திருச்சி தாஸ், ஆ. திராவிடமணி, செயலழகன் பேசினர்.

**அரகண்டநல்லூர்**

23—10—50-ல் குமார — தணிகாசலம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., நீண்டநேரம் எழுத்துரிமையைப் பறிக்கும் காங்கிரஸ் ஆளவந்தாரின் போக்கினைக் கண்டித்தும், சென்னையில் 24—10—50ல் ஆச்சாரியாருக்கு கருப்புக்கொடி காட்டச் சென்ற மக்களிடம் மிருகத்தனமாக நடந்து கொண்ட ஆணவப்போக்கு கூடாது என்றும் நீண்ட நேரம் பேசினார்.

**வாணியம்பாடி**

29—10—50-ல் ஏ. எம். இராமசாமி தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில், சென்னை, 'போர்வாள்' ஆசிரியர் மா. இளஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) முல்லை. எம். பி. வடிவேல், வி. என். தத்தப்பன் எம். குஞ்சிதபாதம் சென்னையில் நடந்த தடியடிதர்பாரைக் கண்டித்தும், குன்றத்தூர் குண்டுமாரியை விளக்கியும் பேசினர். ஆறுமுகம் நன்றி கூறினார்.

**தூத்துக்குடி**

29—10—50 கூடிய நகர தி. மு. கழக செயற்குழு கூட்டத்தில் சென்னையில் ஆச்சாரியார் வந்த அன்று கருப்புக்கொடி காட்டச்சென்ற மக்களை வேட்டையாடிய காட்டு மிராண்டிப் போக்கையும், எழுத்துரிமைப் போரைத் தொடங்கிவைக்க குன்றத்தூரில் கூடியிருந்த மக்கள்மீது துப்பாக்கியால் எட்டுமுறை சுட்ட கொடுமையையும் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

**வேலூர்**

29—10—50-ல் ஆர். இராதாகிருஷ்ணன் தலைமையில் கூடிய தி. மு. க. செயற்குழுக்கூட்டத்தில் சென்னைத் தடியடி, குன்றத்தூர் குண்டு வீச்சு ஆகியவைகளை கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் பலகழக நடவடிக்கைகள் பற்றிய முடிவுகள் செய்யப்பட்டன.

**நிலக்கோட்டை**

29—10—50ல் கழகச் செயலாளர் இ. காத்தான் தலைமையில் கூடிய கண்டனக் கூட்டத்தில் மதுரை இராசமான், மா. இரத்தினம், பி. முத்திருளாண்டி, சையது இபுராகிம், இராசாராம் இரத்தவெறி கொண்டலையும் எதேச்சாதிகார காங்கிரஸ் ஆட்சியின் போக்கை வெகுவாகக் கண்டித்து சென்னையிலும் குன்றத்தூரிலும் நடந்த நிகழ்ச்சிகளை எடுத்து விளக்கி, அடக்குமுறைக்களான தீரர்களைப் பாராட்டியும், சிறையிலடைக்கப்பட்ட வீரர்களை உடனேவிடுதலை செய்யவேண்டுமென்று சர்க்காரை எச்சரித்தும் பேசினர்.

**ஆப்பூர்**

29—10—50ல் கோ. இராசா தலைமையில் கூடிய தி. மு. க. செயற்குழு கூட்டத்தில 24—10—50-ல் சென்னையிலும் 26—10—50-ல் குன்றத்தூரிலும் காங்கிரஸ் ஏகாதிபத்யம் நடந்துகொண்ட அநாகரிகப் போக்கைக் கண்டித்து, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் தடியடிக்கு ஆளான தோழர்களையும், சிறைப்பட்ட செம்மல்களையும் பாராட்டியும் காரணமின்றி அவர்கள் அவதிக்குள்ளாக்கப்படுகின்றனரே என்பதற்காக வருந்தியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**திருப்பத்தூர்**

29—10—50ல் மு. இளங்கோ, தலைமையில் கூடிய செயற்குழு கூட்டத்தில் ஆச்சாரியார் சென்னைக்கு வந்தபொழுது கருப்புக்கொடி காட்டவந்த மக்களை வேட்டையாடிய வெறிச்செயலையும், குன்றத்தூரில் தோழர் என். வி. நடராசன் தொடங்கிவைக்க இருந்த எழுத்துரிமை அறப்போர் ஆரம்பநாள் அன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்த அநியாயச் செயலையும் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும் இருசம்பவங்களிலும் அடக்குமுறைக்குப் பலியான தோழர்களைப் பாராட்டியும், அடிபட்டும், காயமடைந்தும் கஷ்டநஷ்டங்களுக்கான பெண்கள், முதியவர்மற்றும் எல்லா தோழர்களுக்கும் ஆழ்ந்த அனுதாபத்தையும், வணக்கத்தையும் தெரிவித்தும், தடைப்படுத்தப்பட்ட 'தூக்குமேடை' நாடகத்தை நடத்தவும், கிராம பிரசாரத்துக்கு ஏற்பாடு செய்தும், புதிய நிதிக்குழு ஒன்று அமைத்தும், கழக தீவிர நடவடிக்கைகளில் செயற்குழுவினர் கைது செய்யப்பட்டால் பி எம். வேணுகோபால் செயலாளராகவும், தவ. நடராசன் பொருளாளராகவும் இருந்து பணியாற்றவேண்டும் என்றும், செயற்குழுவை விரிவுபடுத்தியும் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

**மதுரை**

29—10—50ல் கலைத்தூதன் தலைமையில் நடந்த மாபெரும் கண்டனப்பொதுக்கூட்டத்தில் சிவஞானம், எம். அப்பாச்சாமி, என். மூத்து சென்னையில்நடந்ததடியடிக்கொடுமையையும்,குன்றத்தூர் துப்பாக்கிப் பிரயோக அநீதியையும் விளக்கி நீண்டநேரம் பேசினர். சென்னை, குன்றத்தூர் ஆகிய இடங்களில் நடந்த இரு சம்பவங்களைக் கண்டித்தும், இதனால் அவதிக்குள்ளாக்கப்பட்டோர் அனைவருக்கும் ஆறுதல் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மல்லிப்புத்தூர்**

29—10—50-ல் அ. சபிராஜன் தலைமையில் நடந்த தி. மு. க. துவக்கவிழா கூட்டத்தில், எம். என். இராமசாமி, விருதை, க. இராமிசாமி காங்கிரஸ் ஏகாதிபத்தியத்தின் கொடுமையான அடக்குமுறைகளைக் கண்டித்துப்பேசினர். சென்னையில் நடந்த தடியடி, குன்றத்தூரில் நடந்த துப்பாக்கித் துரைத்தனம் ஆகியவைகளைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன

**அருப்புக்கோட்டை**

30—10—50-ல் சிவசண்முக சுந்தரன் தலைமையில் நடந்த கண்டனப் பொதுக்கூட்டத்தில்

(6-ம் பக்கம் பார்க்க)

---

## "பிரிவினை வேண்டும்!"

### சட்டக் கல்லூரி மாணவர் தீர்ப்பு.

சென்னை சட்டக் கல்லூரித் தமிழ்க் கழகத்தின் சார்பில் 2—11—50 அன்று 'இந்திய நாட்டைப் பிரிப்பது நிலையானது' என்ற பொருள் குறித்து, சொற்போர் நடைபெற்றது. மேற்படி தீர்மானத்தை காங்கிரஸ் பிரச்சாரத்திலீடுபட்டு வரும் மாணவியான தோழியர் ஆனந்த நாயகி பி. ஏ., எடுத்துமொழிந்தார்.

பிரிவினை வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி தோழர் தாஜுடீன், மேற்படி தீர்மானத்தை எதிர்த்தார். அதை வழிமொழிந்து தோழர் சி. ஜெனார்த்தனம் பி. ஏ. பேசினார்.

முடிவில் மேற்படி தீர்மானம் ஓட்டுக்குவிடப்பட்டபோது 'பிரிவினை கூடாது' என்ற தீர்மானம் தோற்றது. பிரிவினை வேண்டும் என்ற தீர்மானத்துக்குச் சாதகமாக 30 ஓட்டுகள் கிடைத்தன.

பிரிவினை கூடாது என்ற தீர்மானத்துக்கு கிடைத்தது 20 ஓட்டுகள்தான்!

# திராவிட நாடு

ஞாயிறு] 12–11–50 [காஞ்சி


# தியாகக் கட்டம்

★

சர்ப்பம்!
சந்தனக் கிண்ணம்!!

இரண்டிற்குமுள்ள வேற்றுமையை மறந்து, விபரீதப்பாதை நோக்கிப் பயணம் புறப்பட்டிருக்கின்றனர், இந்நாட்டின் 'முடிசூடா மன்னர்'களென நினைத்துத் திரியும் காங்கிரசு ஆட்சியினர்.

ஆத்திரம் கண்ணை மறைக்குமாம் — ஆனால், அது இவர்களது அறிவுக்கே திரை போட்டு வருகிறது! அதிலும், அடுத்த தேர்தல் நெருங்குகிறது என்பதால், இவர்களது போக்கே விசித்திரமயமாகிக்கொண்டு வருகிறது!

எதைக்கண்டாலும் பயம், பாய்ச்சல்! யாரைப் பார்த்தாலும் சஞ்சலம், சந்தேகம்!!

இந்தவிபரீதப் போக்கின் விளைவால், இவர்கள் கண்ணுக்கு சந்தனக்கிண்ணங்கூட சர்ப்பம்போலக் காட்சி தருகிறது!

பட்டம், பதவி நமக்கு எட்டிக்காய் என்று சொல்லியுங்கூட, பயம் நிரம்பிய கண்களோடு நம்மைப் பார்க்கின்றனர்.

கேடுநிரம்பிய காட்டை அழிப்பதுபோல, சோகம் நிரம்பிய ஒரு மாபெரும் சமுதாயக் கேடுகளை ஒழிப்பதற்காகப் பாடுபடும் நமது கொள்கைத் திலைக்கண்டு கொதிப்படைகின்றனர்—கொடுமைகளை எல்லாம் வீசி நம்மை அடக்கத் துடிக்கின்றனர்!

எள்ளல், கேலி, மிரட்டல், கண்டனம் ஆகிய அஸ்திரங்கள் யாவும் அவர்கள் அம்புறாத்தூணியிலிருந்து கிளம்பியும் நம்மை அசைக்கமுடியவில்லையென்பதால் அடக்குமுறை பாதையில் அடியெடுத்து வைத்துவிட்டனர்!

இருதரப்புக்கும் வேதனையானது — மொத்தத்தில் நாட்டை அராஜக பூமியாக்குவது. ஆனாலும், அதுதான் சரியான வழியென்று கருதி விட்டனர்!

திராவிடரியக்க வரலாற்றிலே ஒரு புது அத்தியாயம்—திரும்பி விட்டது. தியாகச் சோதனைக் கட்டம் ஆரம்பமாகிவிட்டது. வீரத்தைச் சோதிக்கும் விசித்திரம் துவக்கப்பட்டுவிட்டது.

அடக்குமுறைப் பாதையில் நடந்து அழிந்துபட்ட சாம்ராஜ்யங்களின் முடிவுகள் வேதனையானவை—ஆனாலும், அதேவழியில் அடியெடுத்து வைத்துவிட்டனர் இந்த அகிம்சா மூர்த்திகள்!

அவர்கள் கொடுமைகள் வளருகின்றன—நம்முடைய பொறுப்பும் அதிகமாகின்றன!

அவர்கள் நம்மீது பாயப் பாய—நமது கடமை விரிந்துகொண்டே இருக்கிறது!

புதுயுகம் காணமுயன்ற எவருமே, புன்சிரிப்போடு வாழ்ந்ததில்லை. தேய்ந்த திராவிடத்துக்காக அறப்போரில் இறங்கிவிட்ட நாம் மட்டும் அதற்கு விதிவிலக்கல்ல.

வேதனைகள், நமது இலட்சிய ஈடேற்றத்திற்கு நாம் தரும் காணிக்கைகள்.

நாம் சிந்தும் இரத்தம் — நமது இன்ப பூமிக்கு அர்ப்பணிக்கும் அமுதத் துளிகள்.

ஆகவே, எத்தகைய அடக்குமுறை நம்மை எதிர்நோக்கினும்—நாம் அவைகளை மகிழ்வோடு ஏற்க வேண்டியவர்களாகி விட்டோம்.

நமது வாழ்வில் தியாகக் கட்டம் உதயமாகி விட்டது.

நெடுநாட்களாக எதிர்பார்த்த 'நேரம்' ஆரம்பமாகிவிட்டது.

தடியடியாலும், துப்பாக்கியாலும் துவக்கி வைக்கப்பட்டு விட்டது.

பொறுப்பு நிறைந்த புதுப் புதுச் சுமைகளை தாங்க வேண்டியவர்களாகி விட்டோம். நமது தியாகச் சீலங்கள், தமது வீரத்தைச் செயலால் காட்டப் புறப்பட்டு விட்டனர்.

நாட்டுப் பற்றால், 'நலிந்த இந்நாட்டைப் பொன்னாடாக்குவோம்' என்ற இலட்சியவெறியால், குருதி கொட்டினும் குண்டுகள் துளைக்கினும் அவைகளை அலட்சியப்படுத்தி புறப்பட்டுவிட்டனர்—அறப்போர்க் களம் நோக்கி!

அந்த முன்னணிக் காளைகளுக்கு, எதிர்காலத்தின் சார்பில், நமது வாழ்த்துகளைக் குவிப்போம்.

அவர்களது காராக்கிரக வாசமும், இரத்தத் துளிகளும் நமது இலட்சிய வெற்றியின் அடையாளங்கள்.

ஆகவே, அவர்கள் பாதையில் நாமும் நடப்போம். அமைதியோடு நடப்போம்.

ஒழுங்கும் கட்டுப்பாடும் நமது கைவிளக்குகளாக இருக்கட்டும். பலாத்காரம், வழக்கம்போல நம்மை விட்டு நீங்கியே கிடக்கட்டும்.

நாம் படும் வேதனை—நமது இன்பத் திராவிடத்துக்கு நாம் செலுத்தும் காணிக்கை.

காணிக்கை செலுத்தவேண்டிய கட்டம் துவங்கிவிட்டது! செலுத்திக்கொண்டே இருப்போம், மாற்றாரின் பசி தீரும் வரை!! ✲

---

5-ம் பக்கத் தொடர்ச்சி

### மக்கள் ஆர்வம்

கோர்ட்டில் வழக்கு விசாரணையைக் கவனிக்க ஏராளமான கழகத் தோழர்கள் வந்திருந்தார்கள். கோர்ட்டு மண்டபம் முழுமையும் கூட்டம் நிரம்பி வழிந்தது. விசாரணையின்போது முக்கிய போலீஸ் அதிகாரிகளும், வழக்கறிஞர்களும் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தனர். நமது தோழர்கள் சர்க்கார் தரப்பில் கூறப்பட்ட குற்றச் சாட்டுகள் மீது குறுக்கு விசாரணை செய்தது நகைச்சுவை கலந்ததாக இருந்தது. நமது தோழர்களின் கேள்விகளுக்கு நேரடியான பதில் கிடைக்காதபோது கோர்ட்டில் சிரிப்பொலி கிளம்பி குலுக்கிற்று.

வழக்கு விசாரணையைப் பார்வையிடுவதற்காக சென்னை மாவட்ட தி. மு. க. கிளைக் கழக முன்னணி வீரர்களெல்லாம் வந்திருந்தனர்.

தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், பூ. கணேசன் M A, செங்கற்பட்டு சின்னையா, சென்னை:- கே. கோவிந்தசாமி, டாக்டர் கணேசன், கண்ணபிரான், காஞ்சி. கலியாணசுந்தரம், சி. வி. ராசன், காஞ்சி சி. வி. ராசகோபால், இராம அரங்கண்ணல், கே. ஏ. மதியழகன் B A முதலானோரும் இன்னும் பல முன்னணி வீரர்களும் வந்திருந்தனர்.

## இரண்டாம் நாள் விசாரணை

கைது செய்யப்பட்டு 24—10—50 இரவிலிருந்து காவலில் வைக்கப்பட்டிருந்த கழகத் தோழர்களில் முதல் நாள் விசாரித்து தீர்ப்பளித்தவர்கள் போக மீதமிருந்த பத்து தோழர்களின் வழக்கும் 7—11—50 அன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டதாக புரசைவாக்கம் தோழர் டி. கோவிந்தன், அ. தர்மலிங்கம் ஆகியோர்மீது சர்க்கார் தரப்பில் குற்றஞ்சாட்டப் பட்டது.

மேற்படி குற்றச்சாட்டை தோழர்கள் மறுத்ததோடு தாங்கள் கருப்புக்கொடி காட்டவே சென்றிருந்ததாகக் கூறினர்.

இனி இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லையென்றால் தாம் விடுதலை செய்து விடுவதாகவும், அதற்கு விருப்புகிறீர்களா என்றும் மாஜிஸ்டிரேட் கேட்டபோது, 'தாங்கள் கருப்புக் கொடி காட்டவே சென்றதாகவும் எந்த உறுதிமொழியும் தரத் தயாரில்லையென்றும்" தோழர்கள் வீரத்தோடு பதில் தந்தனர்.

பிறகு இருவருக்கும் முறையே இரண்டு வாரம் சிறைத்தண்டனை அளிப்பதாக மாஜிஸ்திரேட் தீர்ப்புக் கூறினார்.

முகமலர்ச்சியோடு தோழர்கள் அத்தீர்ப்பை ஏற்றுக் கொண்டனர்.

அடுத்து தோழர்கள் ராஜகோபால், சம்பந்தம், ப. சானகிராமன் ஆகியோர்மீது கெட்டவார்த்தைகளைப் பேசியதாகவும் அதன் மூலம் போக்குவரத்துக்குத் தடங்கல் செய்ததாகவும் சர்க்கார் தரப்பில் குற்றம் சுமத்தப்பட்டது.

தோழர்கள் மேற்படி குற்றச்சாட்டை மறுத்தனர். கருப்புக்கொடி பிடிக்கவே தாங்கள் சென்றதாகவும் கூறினர்.

அதேபோல தோழர்கள் ஆர். பக்தவத்சலு, ஏ. ராஜு, விசுவநாதன் ஆகியோர்மீது ஆபாசமான வார்த்தைகளைப் பேசியதாகவும் கல்லெறிந்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டபோது, தோழர்கள் அத்தகைய குற்றங்களை மறுத்து, தாங்கள் கருப்புக்கொடி காட்டவே சென்றதாகக் கூறினர்.

பின்னர் தோழர்கள் ஏ. ஜி. சம்பந்தம், குப்பராஜு, பாலகதிரவன், பாலசுப்பிரமணியன் ஆகியோர்மீதும்,

நகர போலீஸ் சட்டம் 75-செக்ஷன்படி கல்லலடித்து, போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்ததாகவும் கலாட்டா செய்ததாகவும் குற்றம் சுமத்தப்பட்டதை மறுத்து நால்வரின் சார்பில் எஸ். பாலசுப்ரமணியம் கூறுகையில்,

"வடநாட்டுப் பிரதிநிதியாக வந்துள்ள மந்திரியாருக்கு—இந்நாட்டின் சீர்கேட்டை உணர்த்தவும், எங்கள் அதிருப்தியைக் காட்டவும்—கருப்புக்கொடி காட்ட வந்தோமே யொழிய—மேற்காணும் குற்றச் சாட்டுக்கான ஈடத்தையில் ஈடுபட அல்ல.

கருப்புக் கொடியின் மூலம் எங்கள் அதிருப்தியைக் காட்டுவது சரி என்பதற் காதாரம்—பண்டித ஜவஹர்லால் நேரு, இந்தோனேஷியா செல்லும்போது அவருக்கு அங்குக் கருப்புக் கொடி காட்டப்பட்டது; வெலிங்டன் ஒரு சமயம் இந்தியா வருகையில், அவருக்குக் கருப்புக்கொடி

(8-ம் பக்கம் பார்க்க)

---

# எழுத்துரிமைப் போர் வீரர்கள்

## எஸ். ஸி. மணி, பி. மணி, ராஜா விடுதலை

## பொதுச் செயலாளர் பாராட்டு

### வண்ணையில் வாழ்த்துக் கூட்டம்

'ஆரிய மாயை' — 'காந்தியார் சாந்தியடைய' நூலை விற்ற குற்றத்துக்காக கைது செய்யப்பட்டு மூன்று வாரக் கடுங்காவல் தண்டனை பெற்று, சிறை வாசத்துக்குப் பின் திரும்பிய அறப்போர் வீரர்களான தோழர்கள் எஸ். ஸி. மணி, பி. மணி, ராஜா ஆகியோருக்கு 17—10—50 அன்று சென்னை வண்ணாரப்பேட்டை ராபின்சன் பார்க் மைதானத்தில் மகத்தான வரவேற்பு அளிக்கப் பட்டது.

மேற்படி வரவேற்புக் கூட்டத்துக்கு தோழர் பி. ராமசாமி தலைமை தாங்கினர்.

வெற்றிக் காளைகளின் வீர முயற்சியைப் பாராட்டி கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை, மற்றும் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், என். வி. நடராசன், பி. வி. முத்துச்சாமி ஆகியோர் பேசினர்.

பொதுச் செயலாளர் சி. என். ஏ. பேசுகையில், "எழுத்துரிமைப் போரைத் துவக்கிவைத்து, நல்லதென்று மனதில் பட்டதற்காகப் போராட முன்வந்த நமது வீரர்களைக் காண மகிழ்கிறேன்" என்று பாராட்டினர்.

அறப்போர் வீரர்களுக்கு 3-வது வட்ட தி. மு. கழகத்தின் சார்பில் வாழ்த்திதழ் வாசித்தளிக்கப்பட்டது.

ஆளவந்தார் அடக்குமுறைக்குப் பலியாகி மீண்ட 'ஆரிய மாயை'யின் ஆசிரியரான பொதுச் செயலாளர் சி. என். ஏ. வுக்கும் வரவேற்பு இதழ் வாசித்தளிக்கப்பட்டது.

26—9—50 அன்று சென்னை வண்ணாரப் பேட்டை திராவிட இளைஞர் மன்றத்தின் தோழர்களான எஸ். சி. மணி, பி. மணி, ராஜா ஆகிய மூன்று வீரர்களும், ஏற்கனவே செய்த முடிவையொட்டி மக்கள் கூடும் இடத்தில் நின்றுகொண்டு கையில் "ஆரிய மாயை", "காந்தியார் சாந்தியடைக" என்ற நூல்களைத் தாங்கி, அவைகளைப் படித்துக் காண்பித்து, விளக்கினர்.

அதுபோது, போலீசார் வந்து தோழர்களைக் கைது செய்துகொண்டு போயினர். பிறகு மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் ஒவ்வொருவருக்கும் மூன்று வாரக் கடுங்காவல் தண்டனை அளிக்கப் பட்டது.

---

# டில்லி மந்திரி காட்கில் வரவில்லை!

## அவசர அலுவல்கள் காரணமாம்!!

### சென்னை விஜயம் திடீரென ரத்து!!

4—11—50ல் வடநாட்டு மந்திரி காட்கில் சென்னைக்கு வருகிறார் என்று செய்தித்தாள்கள் தெரிவித்தன. சென்னை மெமோரியல் மண்டபத்தில் கனம் பக்தவத்சலம் தலைமையில் நடக்க இருந்த ஆவி உற்பத்தியாளர் மாநாட்டைத் திறப்புவிழா ஆற்ற வரப்போகிறார் என்று தினமணி, தினசரி, இந்து போன்ற தாள்களில் காணப்பட்டன.

இந்தச் செய்தியைக் கண்ட சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினர், கழகக் கட்டளைப்படி, கருப்புக் கொடி காட்டி திராவிடரின் வெறுப்பினைத் தெரிவிக்க நகர் முழுவதும் சுவரொட்டிகள், துண்டு வெளியீடுகள் மூலம் விளம்பரப்படுத்தினர்.

ஆச்சாரியார் வந்தபொழுது, ஆட்சியாளரின் ஆணவ வெறியாட்டத்தில் சிக்கிச் சிதைந்தவர்கள், அது பற்றிய சிந்தனை சிறிதுமின்றி அடிபட்ட வீக்கங்கள் வாடவில்லை எனினும், ஏற்ற புண்களின் மீது கட்டப்பட்ட கட்டுகள் இன்னும் அவிழ்க்கப்படவில்லையெனினும் ஆயிரக்கணக்கில் மாலை 3-மணிக்கே கூடிவிட்டனர். ஏராளமாக இயக்கத் தோழர்கள் வழக்கம்போல் அமைதியான முறையில் மக்களை அணிவகுத்து நின்றனர்.

இயக்க முன்னணித் தோழர்கள் காலையிலிருந்தே இயக்கத் தோழர்களை திரட்டிடும் பணியிலீடுபட்டிருந்தனர்.

ஆனால் பகல் 1-மணிக்கெல்லாம், காட்கில் வரவில்லையென்று நம்பத் தகுந்த இடத்திலிருந்து தகவல் கிடைக்கவே, மக்கள் கூடியிருந்த மண்டபத்திற்குச் சென்று செய்தியைப் பரப்பி, அவர்களைக் கலைந்து போகும்படிக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மந்திரியார் வரவில்லையென்பதை மிகத் தெளிவாக விளக்கிய பிறகே மக்கள் கலைந்து சென்றனர்.

மந்திரியாருக்கு டெல்லியில் அவசர காரியங்கள் பல இருந்த காரணத்தால் சென்னை விஜயத்தை ரத்து செய்துவிட்டார் என்று காரணம் காட்டப்பட்டிருந்தது, அன்று மாலை வந்த 'தினசரி'யில்!

*

1-ம் பக்கத் தொடர்ச்சி

கொடிகளைத் தாம் கைப்பற்றியதாகவும் சொல்லியதோடு, 'இதோ இருக்கின்றன' என்று சுமார் 20 கருப்புக் கொடிகளைக் காட்டினார்.

கருப்புக் காகிதத்தில், ஒவ்வொரு குச்சியில் வைத்து ஒட்டப்பட்டவையாகப் போலீசார் சமர்ப்பித்த கருப்புக் கொடிகள் இருந்தன.

அதைக் கண்டதும் தொண்டர்கள் எல்லோரும் 'குபீர்' என்று சிரித்தனர்! [காரணம் தொண்டர்களுக்கு கருப்புத் துணிகள் (கைகுட்டை அளவுக்கு) வழங்கப்பட்டிருந்ததே தவிர, காட்டப்பட்டதுபோல அல்ல!]

மேலும் தொடர்ந்து சப்இன்ஸ்பெக்டர் கூறுகையில்:—

இவர்களை நகரப்போலீஸ் சட்டம் 75-வது பிரிவின்கீழ் கைது செய்தேன். இவர்கள் யாவரும் முன்னேற்ற திராவிட கழகத்தைச் சேர்ந்தவர்கள்" என்றார்.

பின், குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கழகவீரர்கள் சார்பில் காஞ்சிபுரம் ஜூபிடர் ஐஸ்பாக்டரி உரிமையாளரான கே. டி. எஸ். மணி சப்இன்ஸ்பெக்டரை குறுக்கு விசாரணை செய்தார்.

மணி:- 24ந்தேதி நாங்கள் கருப்புக்கொடிகாட்டும்போது கைது செய்தீர்களா? அல்லது கலாட்டா செய்துகொண்டிருந்தபோதா?

சப்-இன்ஸ்பெக்டர்:- கலாட்டா செய்தபோது.

கே. எங்கள் எல்லோரையும் ஒரேசமயத்திலா?

ப:- ஆம்.

பிறகு, மாஜிஸ்டிரேட்டை நோக்கி தோழர் மணி சொன்னதாவது, "எங்கள் பத்து பேரையும் ஒரே இடத்தில் கைது செய்ததாக, சொல்லப்படுகிறது. நாங்கள் பத்துப்பேரும் ஒரே இடத்தில் இருந்தவர்களல்ல. நான் காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவன். நானும் வி. பரமசிவமும், அழகரசுவும் ஆக மூன்று பேருமே ஒரு இடத்திலிருந்தோம். மூன்று பேரையும் சேர்த்தே, அதிகாரிகள் கைது செய்தனர். ஆனால் அழகரசு எங்களோடு சேர்க்கப்படவில்லை. இதிலேயே தெரியும் கண்ணில் கண்டோரையெல்லாம் கைது செய்ததோடு, பிறகே எங்கள் மீது இத்தகைய குற்றச்சாட்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது, என்பது!"

மாஜி:- நீங்கள் வழியை மறைத்துக்கொண்டு துர்பாஷைகள் மூலம் பேசியதாகக் கூறப்படுகிறது. துர்பாஷைகளால் பேசுவது என்றால் திட்டினீர்கள் என்பதல்ல. பேசத் தகாத முறையில்......

மணி:- அப்படீன்னு?

மாஜி:- ஆபாசமாக நடந்துகொண்டதாகக் குற்றஞ்சாட்டப் படுகிறது.

இதைக் கேட்டதும் குற்றஞ் சாட்டப்பட்ட கழகத் தோழர்களில் ஒருவரான கே. பி. கஜபதி பின் கண்டவாறு மாஜிஸ்டிரேட்டிடம் தெரிவித்துக் கொண்டார்.

"எங்கள் எல்லோரையும் ஒரே இடத்தில் பிடித்ததாக கூறுகிறார்கள். அது தவறு. நான் டீ கடையிலே, டீ குடித்துக்கொண்டிருந்துவிட்டு வந்தேன். அப்போது ஒரு போலீஸ் வான் வந்து நின்றது. அதில் அசிஸ்டெண்ட் கமிஷனர் இருந்தார். அவர் தான் என்னை கைது செய்தார். இந்த இன்ஸ்பெக்டர் அல்ல. இவர்கள் எல்லோரையும் போலீஸ் ஸ்டேஷனில்தான் கண்டேன். என்னைக் கைது செய்தது தான் என்று இவர் கூறுகிறார்!"

மாஜி:- கைது செய்தது யாராயிருந்தாலென்ன? ஒரு போலீஸ் அதிகாரிதானே கைது செய்தார்.

பிறகு, மீண்டும் தோழர் கே. டி. எஸ். மணி போலீஸ் அதிகாரியை சில கேள்விகள் கேட்டார்.

மணி:- ஆமாம், என்னைத் தாங்கள்தானே கைது செய்தீர்கள்?

சப்-இன்ஸ்:- ஆமாம்!

மணி:- என் கூட யாரார் இருந்தார்கள்?

பதில்:- இந்த ஒன்பது பேரும்தான்.

மணி:- சரி என்னைக் கைது செய்தீர்களே அன்று நான் எந்த கலர் சட்டை போட்டுக்கொண்டிருந்தேன்?

பதில்:- இப்போது போட்டிருக்கும் சட்டைதான்.

மணி:- (மாஜிஸ்டிரேட்டைப் பார்த்து) நான் அன்று வெள்ளைநிற சட்டை போட்டிருந்தேன். என்னைக் கைதுசெய்து என்னைப்பற்றிய விபரங்களைப் போலீசார் எழுதிக் கொண்டபோது அதுபற்றி குறிக்கப்பட்டிருக்கிறது. இப்போது நான் போட்டுக்கொண்டிருப்பது பழுப்பு நிறம். (சட்டை, சலவை செய்யப்பட்டு மடிப்பு கலையாமல் இருந்தது) இருந்தும், இன்று போட்டிருக்கும் அதேசட்டையைத்தான் அன்றும் நான் போட்டிருந்தேனும் இதிலேயே தெரியவில்லையா!

மாஜி:- இதெல்லாம் ஏன்? சாட்சிகள் இருக்கிறார்களா?

பதில்:- நான் வழக்காட விரும்பவில்லை. ஆனாலும் எங்கள்மீது சுமத்தப்படும் குற்றத்தைப் பற்றி விளக்கவே இவைகளைக் கேட்கிறேன். தயவுசெய்து தாங்கள் எனது கேள்விகளுக்கு அனுமதிக்க வேண்டுகிறேன். பிறகு தாங்கள் தரும் தீர்ப்பை நான் ஏற்றுக்கொள்ளத் தயார்!

(சப்இன்ஸ்பெக்டரை நோக்கி) நீங்கள் எங்களைக் கைது செய்தபோது நாங்கள் கைகளில் என்ன வைத்திருந்தோம்?

பதில்:- கருப்புக்கொடிகளை வைத்துக்கொண்டு வீசிக்கொண்டிருந்தீர்கள்.

கே:- நாங்கள் கற்களை வீசியதாகச் சொன்னீர்களே, அதைப் பார்த்தீர்களா?

ப:- பார்த்தேன்.

கே:- ரோடில், கல் ஏது?

ப:- ஓரத்தில் இருக்கலாம்.

கே:- எங்களைக் கல்லோடு கைது செய்தீர்களா? கருப்புக்கொடியோடு கைது செய்தீர்களா?

[ பதில் இல்லை ]

சரி நாங்கள் கல் வீசியதாகக் கூறினீர்களே யார்மீதாவது அடிபட்டதா? அடிபட்டவர்கள், எதாவது உங்களிடம் புகார் செய்தார்களா?

ப:- ஒருவரும் புகார் செய்யவில்லை. இதை ஏன் புகார் செய்யவேண்டும் என்று பேசாது சென்றிருக்கலாம்.

பிறகு தோழர் பி. கே. கபாலி மாஜிஸ்டிரேட்டிடம் தெரிவித்ததாவது:—

"நாங்கள் கருப்புக் கொடி வீசியபோது கைது செய்ததாகக் கூறப்பட்டது. அப்படியிருந்தால் கொடிகள் கசங்கியிருக்குமல்லவா? ஆனால் இங்கே காட்டப்பட்ட கொடிகள், இன்று காலையில், கவனத்தோடு தயாரிக்கப்பட்டதுபோல, எல்லாம் ஒரேமாதிரி யிருக்கிறது. அதோடு அன்று நாங்கள் கருப்புக் கொடி காட்டத் துணிகளைத்தான் கொண்டு போயிருந்தோம்—கருப்புக் காகிதங்களை அல்ல!

மா:- சாட்சிகள் உண்டா?

ப:- இல்லை நாங்கள் வழக்காட விரும்பவில்லை.

மா:- அப்படியானால் என் செய்வது? நீங்கள் இனிமேல் இப்படியெல்லாம் நடக்காமலிருப்பதாக உறுதி மொழி தந்தால், விட்டு விடுகிறேன்.

மணி:- எப்படியெல்லாம் நடக்காமலிருந்தால்...

மாஜி:- கருப்புக்கொடி பிடிப்பது...

மணி:- எங்கள்மீது வழக்கு போடப்பட்டது நாங்கள் கருப்புக்கொடி பிடித்ததற்கா அல்லது கல் வீசினோம் என்பதற்கா அல்லது கலாட்டா செய்தோம் என்பதற்கா?

மாஜி:- வீட்டில் புருஷன் பெண்டாட்டி சச்சரவு போட்டுக் கொண்டாலும் அது கலவரம் என்றுதான் சொல்லப்படும். அதுபோல விரும்பத்தகாத வார்த்தைகள் பேசப்பட்டாலும், அப்படித்தான் சொல்வார்கள்!

இந்த நிலையில் சர்க்காரின் வக்கீல் தலையிட்டு 'கருப்புக்கொடி பிடிக்க வந்ததற்காக அல்ல வழக்கு' என்று குறிப்பிட்டார்.

மணி:- கருப்புக்கொடி பிடிக்காமலிருக்கிறீர்களா விட்டு விடுகிறேன் என்று சொன்னீர்களே— அதற்காகத்தான் கேட்டேன்!

மாஜி:- ஒழுங்கீனமாக நடந்துகொண்டதாகவே உங்கள்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

மணி:- நாங்கள் மூவரும் எங்களூரிலிருந்து கருப்புக்கொடி காட்டவே வந்தோம். ஆனால் கல்லெடுத்து கலாட்டா செய்ததாகக் கூறப்படுகிறது. அது, அவர்கள் மனச்சாட்சிக்கு 'சரி' என்று பட்டால் ஏற்றுக் கொள்ளத்தயார்.

கல்லெடுத்து கலாட்டா செய்வதில் நம்பிக்கையற்றவர்கள் நாங்கள். அதிருப்தியை வடநாட்டு மந்திரிக்குத் தெரிவித்துக்கொள்வதற்காக, சட்ட வரம்புக்கு உட்பட்டு, அமைதியோடு, ஒழுங்காகக் கருப்புக்கொடி காட்டுவதுதான் எங்களது இலட்சியம்.

மாஜி:- சரி. சாட்சிகள் உண்டா?

மணி:- கிடையாது.

பிறகு ஒவ்வொருவரையும்யாராவது "உறுதி மொழி" (Undertaking) தந்துவிட்டு போகத் தயாராஎன்று மாஜிஸ்டிரேட்கேட்க, எவரும்அதற்கிசையவில்லை. 'வடநாட்டு மந்திரிகள் வரும்போது தாங்கள் கருப்புக்கொடி காட்டவே செய்வோம்" என்று நமது கழகவீரர்கள் பதில்தந்து, வெளியே செல்ல மறுத்துவிட்டனர்.

பிறகு ஒவ்வொருவருக்கும் இரண்டுவாரச் சிறைவாசத் தண்டனை அளிப்பதாக மாஜிஸ்டிரேட் தீர்ப்பு அளித்தார்.

மகிழ்ச்சியோடு தங்களது வணக்கத்தைச் செலுத்திவிட்டு எல்லோரும், அழைத்துச் செல்லப்பட்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

### ஏஜண்டுத் தோழர்கட்கு

அடுத்த வார இதழ் சென்னை மாநில திராவிட மாணவர் முன்னேற்றக் கழக முதல் மாநாட்டின் சிறப்பு மலராக வெளிவரும்.

பக்கங்கள் 12. விலை அணா 3.

சென்னையே காணாத சிறப்பு பெற்ற மேற்படி மாநாட்டின் விபரங்களோடு, மலர் விளங்கும்.

அதிகப் பிரதி வேண்டின் செவ்வாய்க்குள் தெரிவிக்க வேண்டுகிறோம்.

—நிர்வாகி.

# சிந்தனைக் களஞ்சியம் மறைந்தது!

தூண்டா மணிவிளக்கு திடீரென்று அவிந்துவிட்டது! இலக்கிய உலகில் ஒரு சகாப்தம் முடிந்துவிட்டது! இருட்டு, கும்மிருட்டு, எங்கும் இருட்டு, சூழ்ந்துவிட்டது! அகில உலகமே இன்று துக்க இருளில் சிக்கிக்கிடக்கிறது!

அறிவு புலம்புகிறது, இலக்கியம் கண்ணீர்பெருக்குகிறது! நாடகம் அழுதுகொண்டே இருக்கிறது! நல்லறிவாளரின் சிந்தனையே அசைவற்று நின்றுவிட்டது!

அறிஞர் பேர்னார்ட்ஷா மறைந்துவிட்டார்! அறிவுலகு இருண்டுவிட்டது.

அவர் உலக மேதை — ஒப்பற்ற நாடகப் புலவர்—ஈடு இணையற்ற இலக்கிய கர்த்தா—அரசியல் ஞானி ஆம், அவர் இருபதாம் நூற்றுண்டின் அறிவின் பிரதிநிதி! அவர் கருத்துச் சுரங்கம், அறிவு பொக்கிஷம், உண்மைகளின் களஞ்சியம்!

ஷா, பகுத்தறிவு பகலவன், சீர்திருத்த நிலவு, புதுமைத் தென்றல், புத்துலகத் தூதுவன்!

ஷா, மறைந்தார் என்ற சேதி கேட்டு, நாம் நிலைகுலைந்தோம், நினைவிழந்தோம், துடரம் நம்நெஞ்சையும், உடலையும் பிடித்தாட்டிற்று!



அவர் பிராடஸ்டெண்ட் மதத்தினரான ஜார்ஜ் சார்ஷாவுக்கும், எலிசபெத் கர்லி அம்மையாருக்கும், டப்ளின் நகரில் 1856-ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 26-ம் நாள் பிறந்தார். உடன் பிறந்தோர் இன்னும் இருவர் உண்டு

இளமையிலே வறுமையிலே உழன்று, பல சிறுமைகளுக்குள்ளாக்கப்பட்டு வளர்ந்து தம்மூக்கத்தால், இடைவிடாத உழைப்பால் உலகமேதையானவர் ஷா!

அவர் பல ஏடுகளில் இலக்கிய, நாடக, இசை, அரசியல் விமரிசகராக இருந்து பணியாற்றினர். சில ஆண்டுகள் பொதுமேடைகளில் அரசியல் பிரச்சினைகளைப்பற்றிப் பேசிவந்தார்.

அவர் சார்லட் பேயன் டவுன் சென்டு அம்மையாரை மணந்து இல்லற வாழ்க்கையை இனிது நடத்தினர். அவருக்கு குழந்தைகள் ஏதும் இல்லை.

அவர் ஐம்பது நாடகங்களுக்குமேல் எழுதியுள்ளார். பழங்கால'பாணியிலே' அமைப்புகளும் கிரேக்க, ரோம முறைகளும் கையாளப்பட்டிருந்தாலும், புதுமைக்கருத்துக்களும், மறுமலர்ச்சி வாடையும் எப்பொழுது உண்டு, அவரது நாடகங்களில!

அவருக்கு 1925ல் நோபல் பரிசு அளித்தது உலகு—அதனை ஸ்வீடிஷ் இலக்கிய வளர்ச்சிக்கும், ஆங்கில கலைவளர்ச்சிக்கும் பயன்படுத்திடச் செய்தார்.

பெண்களின் பெருமையைப்பற்றிப் பேசியிருக்கிறார்—பொன்னான பொதுவுடைமைக்கருத்துகளை கூறியிருக்கிறார் முதலாளித்துவத்தை என்றுமே எதிர்சதுவந்தார்—பிரபுத்துவதிற்கு அவர் நேர் விரோதி — அன்றன்றுட அரசியல விளைவுகள்பற்றி வேடிக்கையாக, சிரிப்பைபக்கலந்து சிந்தனையைத் தூண்டும்படியான கருத்துரைகளை வழங்கியவண்ணமிருந்தார்.

பேரறிஞர் பெர்னாட்ஷா, நாம் வாழும் நாட்களிலே வாழ்ந்தார் — நாம் நடமாடும்பொழுதே நடமாடினர்—அதனால் நமக்குப்பெருமை தேடித்தந்தார்! நாம் உலவும் காலத்திற்கு புதியதொரு கௌரவத்தைக் கொடுத்தார்.

ஷா, உலகுக்கு அறிவு தந்த மணியாரம்! பகுத்தறிவு ஏற்றிவைத்த ஒளிவிளக்கு! தேடிக் கிடைக்காத பெருஞ்செல்வம்!

அவர் 2—11—50ல் தமது 94-வது வயதில் மறைந்தார் என்ற சேதி கிடைத்தது—நாம் திடுக்கிட்டோம். தள்ளாதவயதிலும், தளரா உழைப்புடைய அறிவுக்கருவூலத்தை இழக்கிறோமே என்ற ஏக்கம் நம்மைவிட்டு அகலவே இல்லை; ஷா, நான் வாழும் அளவிற்கு மேலும் வாழ்ந்து, தன் வாழ்நாட்களிலேயே புகழேணியின் உச்சிவரை போய், பிறகே மறைந்தார் என்றாலும், நாமால் அவர் பிரிவை சகிக்க முடியவில்லை.

ஷா, மறைந்தார் — நாம் மறக்கவில்லை அவரை, அவரும் உண்மையில் நம்மைவிட்டு மறையவில்லை! இவ்வுலகுள்ளவரை, உலகிலே மக்கள் உலவுகிறவரையில், அவர்கள் சிந்தனையிலே தெளிவுள்ளவரையில், தெளிவிலே அறிவு மணம் வீசும் வரையில் ஷா இருப்பார் — இருக்கிறார், நம்முடன்! அவர் புகழ் ஓங்குக!

---

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். எஸ் இராமசாமி சென்னை, குன்றத்தூர் நிகழ்ச்சிகளை விளக்கி, சர்க்காரின் போக்கை வன்மையாகக் கண்டித்துப் பேசினர்

**நாகை**

30—10—50-ல் என். எஸ். குழந்தைசாமி தலைமையில் கூடிய தி. மு. க. செயற்குழு கூட்டத்தில் சென்னை, குன்றத்தூர் நிகழ்ச்சிகளை கேட்டு வருந்துவதுடன், அதனால் அவதிக்குள்ளாக்கப்பட்டோரின் நெஞ்சுரத்தைப் பாராட்டியும் சர்க்காரின் முறைகெட்டபோக்கைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன, நாகை. கோ, இராதாமணாளன், கே. பெருமாள். தீர்மானங்களை விளக்கிப் பேசினர்.

**காவேரிப்பாக்கம்**

30—10—50ல் க. சம்பந்தன் தலைமையில் நடந்த செயற்குழு கூட்டத்தில் சென்னை, குன்றத்தூர் இடங்களில் ஆட்சியாளரின் அக்கிரம போக்கைக் கண்டித்துத்தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ஜெயங்கொண்டான்**

28—10—50ல் இளநாகன் தலைமையில நடந்த கண்டனக்கூட்டத்தில இலக்குவன், வேலாயுததாசன் ஆகியோர் காங்கிரசாரின் காட்டுமிராண்டித்தனமான அடக்குமுறைகளைக்கண்டித்துப்பேசினர். அன்று தி. மா. மு. கழகமும் அமைக்சப்பட்டது.

**மாயவரம்**

31—10—50ல் வை. மாணிக்கம் தலைமையில் கூடிய செயற்குழு கூட்டத்தில் சென்னை, குன்றத்தூர் கோர வெறியாட்டங்களைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**குரிசிலாம் பட்டு**

1—11—50ல் கே. எம். பாலசுப்பிரமணியம் தலைமையில் கூடிய செயற்குழு கூட்டத்தில் 24—10—50ல் சென்னையிலும், 26—10—50ல் குன்றத்தூரிலும் 'அகிம்சா' சர்க்கார் நடந்துகொண்ட அக்கிரமமான போக்கைக் கண்டித்தது தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

**ஆர்க்காடு**

1—11—50ல் கூடிய செயற்குழுக் கூட்டத்தில் 21—10—50ல் நடந்த பொதுக்கூட்டத்தின் வரவு செலவு கணக்கு பரிசீலிக்கப்பட்டது. செலவு ரூ 265—3—3, வரவு ரூ 251—0—0, ஆக அதிகப்படி செலவு தொகை ரூ 14—3—3 என்று காட்டப்பட்டு அதனை வசூல் செய்து நேர் செய்து கொள்ள முடிவு செய்யப்பட்டது. பிறகு அடக்குமுறையின் உச்சக்கட்டத்தில் நிற்கும் காங்கிரஸ் சர்வாதிகார போக்கின் அவலட்சணம் சென்னை, குன்றத்தூர் நிகழ்ச்சிகளால் வெளியாக்கப்பட்டதை விளக்கி, சர்க்காரைக் கண்டித்தும், அவதிக்குட்பட்டவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (தொடரும்)

---

# தண்டனைபெற்ற தண்டமிழ்வீரர்கள்

## சிறைவாசம் கழிந்து திரும்பினர்

### திராவிடமணி, அனந்தப்பன், வைரவன் விடுதலை

ஆச்சாரியார் சென்னைக்கு வருகிறார் என்பதை அறிவிக்கும் வகையில் 23—10—50 இரவு சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்தார் என்பதற்காக ஆளவந்தாரால் பிடித்துச்செலலப்பட்டு, ஒருவாரக் காவல் தண்டனை அடைந்த சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகக்கமிட்டி உறுப்பினரும், தண்டையார்பேட்டை வட்ட கழகச்செயலாளருமான சி. எஸ். திராவிடமணி 30—10—50 அன்று காலை 10 மணிக்கு சிறையிலிருந்து விடுதலையானர்.

ஒருவாரத் தண்டனையை அனுபவித்துவிட்டு ஆளவந்தாரின் அடக்குமுறை முத்திரையைப் பொறித்துக்கொண்டு சிறையினின்றும் வெளியேறிய கழக வீரரை ஏராளமான கழகத் தோழர்கள் வரவேற்றனர். தண்டையார்பேட்டை கழகத்தோழர்கள் தங்கள் செயலாளருக்கு மலர்மாலை சூட்டி மகிழ்வித்தனர்.

தண்டையார்பேட்டை தி. மு. க. துணைச் செயலாளரான தோழர் ஏ. டி. கோவிந்தசாமி, மற்றும் தோழர்களான ஆர். எஸ். வேணு, பி. சங்கரன், ஆர். எஸ். சம்பி, ஏ. தணிகாசலம், எஸ். கே. நாகப்பன் முதலிய முக்கிய வீரர்கள் வந்திருந்தோரில் குறிப்பிடத்தக்கவர்கள்.

தோழர்களோடு, விடுதலையான தோழர் திராவிடமணி நேராக தலைமைக்காரியாலயத்திற்கு வந்து சென்னை மாவட்ட கழகச் செயலாளர் தோழர் கோவிந்தசாமியைச் சந்தித்து அளவளாவிவிட்டு, பின்னர் வீட்டிற்குச் சென்றார்.

ஆச்சாரியார் சென்னை வருகையையொட்டி 24—10—50 அன்று கருப்புக்கொடி காட்டச் சென்றதாக, காருண்ய மிகுந்த காங்கிரஸ் ஆளவந்தாரால் கைது செய்யப்பட்டு, லா காலேஜ் போலீஸ் ஸ்டேஷனில் அடைத்துவைக்கப்பட்டு பின்னர் மாஜிஸ்டிரேட்டால் ஒருவாரம் கடுங்காவல் தண்டனையடைந்த இலட்சிய வீரர்களான தோழர்கள் சிங்காரத்தோட்டம் எம். அனந்தப்பன், மீரான்சாகிபு தெரு வைரவன் ஆகிய இரு தோழர்களும் 30—10—50 அன்று விடுதலையாயினர்.

ஆளவந்தாரால் ஒருவாரம் சிறைக்குள் பூட்டப்பட்டு மகிழ்வோடு ஒருவாரத்தை காராக்கிரகத்தில் கழித்துவிட்டு, புன்சிரிப்போடு சிறையினின்றும் அவர்கள் நீங்கிய காட்சி, திராவிட இளம் வீரர்களின் நெஞ்சுறுதியின் சின்னமாக இருந்தது.

# ★குன்றத்தூர் கொடுமைகள்★

—✕—

எட்டு முறைகள் சுட்டு, காங்கிரஸ் ஆளவந்தார், தங்கள் 'அகிம்சா' பாதையை அகில உலகுக்கு அறிவித்த ஊர்—குன்றத்தூர்! அங்கு நடைபெற்ற அவர்களின் ஆர்ப்பாட்டம் சொல்ல முடியாது. அணுகுண்டு வீசப்பட்ட 'ஹிரோஷிமா' ஆகவே, ஆயிற்றாம்!—குன்றத்தூர்!

குன்றத்தூர் கோரங்களில் சில—நமக்கு எட்டிய வரையில்!

*　*　*

26–10–50 இரவு 9-30 மணிக்கு பூந்தமல்லி போலீஸ் இன்ஸ்பெக்டரும், காங்கிரஸ் அபிமானி திருவாளர் கே. இராகவ (பிள்ளை) யும் பெரிய தெருவில் போய்க்கொண்டிருக்கும் பொழுது, நகரப் பெரியவர் உயர்திரு டி. எம். துரைசாமியார் அவர்களை அழைத்து, 'என் வீட்டில் ஆனைபுத்தூரைச் சேர்ந்த பதின்மர், பயந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நீங்கள்தான் வெளியில் அனுப்பவேண்டும்' என்று கேட்டுக் கொண்டார். அவர்களை அழைத்துக்கொண்டு போய், நடு கடைவீதியில் விட்டு, நாய்களை அடிப்பதைப் போல அடித்து விரட்டினார்கள். அடிபட்ட அவர்கள் மீண்டும் நகரப்பெரியவர் வீட்டிற்கே ஓடினார்கள். அவர் கண்ணீர்சிந்தினார். 'காலைவரை இருந்து போங்கள்' என்று கருணையோடு கூறினார். வீட்டிலிருப்போரையும் வெளியில் இழுத்துச்சென்று கொடுமைக்காளாக்கும் சர்க்காரின் போக்கே போக்கு!

*　*　*

மாலை 5-30 மணிக்கு, டீ கடையில் டீ குடித்துக் கொண்டிருந்த நெசவுத் தொழிலாளி ஐம்பதையும் கடந்த பெரியவர் திருவாளர் மயிலை. சுப்பையா என்பவரை இருபது முப்பது 'அதிகார அம்புகள்' சுற்றி வளைத்துக்கொண்டு, கண்டபடி ஏசி, காலாலும், கையாலும் உதைத்தும், அடித்தும் மிதித்தும் போட்டுவிட்டனர். அவர் கையிலே பலமான அடி—சென்னை மருத்துவ மனையில் கட்டு கட்டிக்கொண்டு வந்துள்ளார். காயம் ஆறி சுகமடைந்து மீண்டும் தொழில் செய்ய இன்னும் ஆறு மாதங்களுக்கு மேலாகும் என்று டாக்டர் கூறியதாகத் தெரிகிறது—ஐயோ, அவர் இனி என்ன செய்வார்?

*　*　*

கூட்டம் நடக்க இருந்த இடத்தில் நட்டிருந்த 30' உயரமுள்ள கொடி கம்பத்தையும் 7' நீளம் 3' அகலமுள்ள பெஞ்சியையும் பகல் 10-30 மணிக்கே கொண்டுபோய் விட்டார்கள—காகிதத்தினால் செய்யப்பட்ட கொடிகளையும், கொளுத்திவிட்டனர். துணியினாலாக்கப் பட்ட கழகக் கொடிகள் மூன்றை அவர்களே எடுத்துக் கொண்டு போய்விட்டார்கள்! ஐயோ, சுதந்திரமே, நீ இப்படியா வளரவேண்டும்!

*　*　*

144-தடையுத்தரவை வாங்கப் பெரும்பாடு பட்டவர் உள்ளூர் திருவாளர் பாலப்(பிள்ளை) என்பவர் என்று குன்றத்தூர் கூறுகிறது! அதற்கு மந்திரி ஒருவர் தோன்றாத் துணையாயிருந்து உதவினாராம்—இப்படியும் பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள். அந்தப் 'பெரும்புள்ளி' ஜில்லாபோர்டு உறுப்பினராம். திராவிட இயக்கத்திலிருந்து விலகிவிட்டேன் என்று கையெழுத்துப் போட்டுத் தராவிடில் ஊரை விட்டே விரட்டிவிடுவேன் என்று மிரட்டி வருகிறாராம்—தெருவுக்குத் தெரு நின்று கூவிடுகிறாராம்—பூந்தமல்லி போலீஸ் நிலையமே என் விரல் ஆடினால் ஆடும், குரல் கேட்டால் ஓடிவரும் என்று கூறி தன் வீரப்பிரதாபங்களை விளம்பரப்படுத்தாத நாளே இல்லையாம்!

X　X　X

எட்டுமுறை சுட்டார்களல்லவா, ஏழைபங்காள ஆட்சியினர்! அதுபோது ஒருகுண்டு மின்சாரக்கம்பியைத்தாக்கி அறுத்து வீழ்த்திற்றாம்!! நல்லவேளை, வீழ்ந்த கம்பி கூட்டத்தின் மத்தியிலோ வீட்டுக்கூரையிலோ விழுந்திருந்தால் என்ன நடந்திருக்குமோ?

X　X　X

144க்கு காரணமாயிருந்த காங்கிரஸ்பிள்ளைக்கு வேண்டாதவர்கள் எல்லாம் அன்று தாக்கப்பட்டனராம். அவர்கள் வீடுகளில், கழகத் தோழர்கள் மறைந்திருப்பதாகக்கூறி அவர்களை எல்லாம் தொல்லைக்கு ஆளாக்கப்பட்டனராம்!

✻

# கலைஞர் உரிமையில் கைவைத்தல் ஆகாது!

## காமராஜ் போக்குக்கு கண்டனம்

### 'இரத்தக் கண்ணீரில்' டி. கே. சண்முகம்

நடிகவேள் எம். ஆர். ராதா கடந்த இரு வாரங்களாகச் சென்னையில் "இரத்தக் கண்ணீர்" என்ற, சீர்திருத்த நாடகத்தை நடத்திவருகிறார்.

அந்நாடகம் முதல் நாள் பேராசிரியர் மு. வரதராசன் தலைமையிலும், இரண்டாம் நாள் உயர்நீதி மன்ற நீதிபதி சோமசுந்தரம் தலைமையிலும் நடைபெற்றது.

பிறகு 3—11—50 அன்று மேற்படி நாடகத்துக்கு கலைஞர் டி. கே. சண்முகம் தலைமை வகித்திருக்கிறார். அன்று, நண்பர் ராதாவின் நடிப்புத் திறமையை மிகச் சிறப்பாகப் பாராட்டிப் பேசுகையில் தோழர் சண்முகம், வேதனையோடு வெளியிட்டபகுதிகளைக் கீழே தந்துள்ளோம்.

தமிழ்நாட்டு காங்கிரஸ் தலைவரான காமராஜ், தேவகோட்டையில் ஒரு பொதுக் கூட்டத்தில் சமுதாய நாடகங்கள் சம்பந்தமாகக் குறிப்பிட்டது குறித்தே நண்பர் சண்முகம், அவ்வளவு உணர்ச்சியோடு பேசியுள்ளார்.

கலையின் பெருமையுணராத நிலையில், செருக்கோடு பேசித்திரியும் காமராஜரின் கண்ணியமற்ற போக்கைத் துணிவோடு கண்டித்த தோழர் டி. கே. சண்முகத்தின் நேர்மைபுணர்ச்சி பாராட்டக்கூடியதாகும்.

நடிகர் டி. கே. சண்முகம் பேசிய பேச்சின் பகுதிகள்:

"நண்பர் எம். ஆர். ராதா கலையை ஒரு பிரசாரமாகச் செய்வதைக்கண்டு சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். 'என்ன இப்படியா செய்வது?' என்று சொல்லலாம். ஆனால், அப்படிச் சொல்லுகிறவர்கள் ஒன்றை மறந்துவிடக் கூடாது. கலைஞர்கள், தங்கள் கருத்துக்களை வெளியிட உரிமை கொண்டவர்கள். கலைஞர்களின் கருத்துக்களை வெளியிட எந்த நாட்டிலும் சுதந்தரம் உண்டு. பத்திரிகை ஆசிரியர்களைப் போலவும் நூலாசிரியர்களைப் போலவும், மேடைகளில் அரசியல் தலைவர் தங்கள் கருத்துக்களை வெளியிடுவதைப் போலவும் நடிகர்களும் தங்கள் எண்ணங்களைத் தங்கள் நாடகமூலம் எடுத்துக்காட்ட வேண்டும். இது, அவர்களது உரிமை. இதைக்கட்டுப்படுத்துவது, கூடாது. ஆனால் சமீபத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராஜ் தேவகோட்டையில் பேசியிருப்பதாக அறிந்தேன். அவர் சொன்னாராம் "கருப்புச்சட்டைக்காரர்களின் நாடகங்களுக்கு அதிகாரிகள் போவதும், அவர்கள் நாடகங்களைப் பார்ப்பதும் கூடாது" எனபதாக!

நான், தமிழ்நாடு நாடகக்கலைக் கழகத்தின் தலைவன். காமராஜ், நாடகக்கலைக் கழகத்திற்கு ஆதரவாளர். அவர் பேசியிருக்கிறார், அவ்விதம்! அவரது கூற்றைக் கண்ட எவருக்கும் வருத்தம் ஏற்படாமலிருக்காது.

மோசமான, நிர்வாணமான பேசும் படங்களுக்கு மந்திரிகள் போவதும், 'தெருவில்வாரானே என்னைத் திரும்பிப் பாரானே' என்று பாடி அபிநயம் பிடிப்பதைக் கண்டு ரசிப்பதுமாக இருக்கும்போது நல்ல கருத்துக்களைக் கூறும் தோழர் ராதா போன்றாரின் நாடகத்துக்கு ஏன் போகக்கூடாது?

அதிகாரிகள் என்றால் அவர்களும் மனிதர்கள்தானே! நல்ல காட்சிகளைக் காணவேண்டும் என்ற ஆசை இருக்காதா? அத்தகைய உள்ளம் அவர்களிடம் இல்லையா? ரசிக்கக் கூடாதா? அதிகாரிகள் என்றால் உலக நடவடிக்கைகளிலிருந்தே ஒதுங்கிப்போய் விடவேண்டுமா? ஆபீஸ் தொல்லை தீர்ந்து சிறிது நேரங்கூடப் பொழுதுபோக்கவும் அவர்களுக்கு உரிமை இருக்கக் கூடாது என்று காமராஜ் கருதுகிறார் போலும்! காலம் மாறிக் கொண்டேயிருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்னால் சீர்திருத்த நாடகம் என்றால் வரும்படியும் இல்லை. ஆதரவும் இல்லை. ஆனால், இப்போதோ சீர்திருத்த நாடகம் என்றால்தான் கூட்டத்தைப் பார்க்கமுடிகிறது. இதை, காமராஜ் போன்றவர்கள் உணரவேண்டும்.

கண்டிப்பதும், மிரட்டுவதும் கூடாது. தவறானது. இதை உணரவேண்டும்."

—✻—

# ★காங்கிரஸ் கோலாகலம்★

—✕—

பூந்தமல்லியில் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருக்கும் 'திராவிடன்' ஆசிரியரும், கழக அமைப்புக்குழு செயலாளருமான தோழர் என். வி. நடராசன், குன்றத்தூர் கழகவீரரும் 26-10-50ல் பேச்சுரிமைப்போரில் பங்குகொள்ள இருந்தவருமான தோழர் பாலசுந்தரம் ஆகியோரைக்காணச் சென்னையிலிருந்து 29—10—50 அன்று தோழர்கள் எஸ். வி. லிங்கம், கே. கோவிந்தசாமி, டி. எம். பார்த்தசாரதி ஆகியோர் சென்றிருந்தார்கள்.

தோழர்களைக் காணவிரும்புவதாகவும், அதற்கு அனுமதி தருமாறும் பூந்தமல்லி மாஜிஸ்திரேட் முன்னர் காலை 10½-மணிக்கெல்லாம், காணச்சென்ற தோழர்கள் விண்ணப்பம் செய்து கொண்டனர்.

காலை 10½க்கு விண்ணப்பம்! நண்பகல் 3 மணி ஆகியும் பதிலே கிடைக்கவில்லை!!

ஒருபெரிய ஆலோசனை நிரம்பியசட்டசிக்கல் நிறைந்தவிஷயமல்ல—எனினும் நண்பகல் 3 மணி ஆயிற்று, பதில்தர!!

காவலில் இருக்கும் கைதிகளுக்கு வெளியிலிருந்து சாப்பிடுவதற்கான பழம்முதலியவைகள் அனுமதிக்கப்பட்டவையாகும். அதை பொட்டி சென்னையிலிருந்து சென்ற தோழர்கள்—கழகத்தின் முக்கியஸ்தர்கள்—பழங்களை வாங்கிச் சென்றிருக்கின்றனர்.

அதைக்கொடுக்கவேண்டும் என்று அனுமதி கோரியபோது, காங்கிரஸ் ஆட்சியின் 'அதிகார அப்பு' உடனே அனுமதிக்கவில்லை.

'ஏ! அப்பா — இவ்வளவு பழமா? இவ்வளவும் செரிக்குமா?" என்று, தோழர்களை நோக்கிக் கிண்டல் செய்திருக்கிறார்!

*　*　*

சைதாப்பேட்டை — சப்ஜெயிலில் பொறுப்புள்ள பதவியில் 'அவர்கள்' கூட்டத்தார் ஒருவர் இருக்கிறார். அவரது வேலை தினசரி கைதாகி அங்கு கொண்டுபோய் அடைக்கப்பட்டிருந்த நமது கழக வீரர்கள் உள்ளம் புண்படும்படி, ஏதாவது சொல்வததானாம்! நமது தோழர்களில் ஒருவரை 'என்ன ஜாதி" என்று கேட்டாராம். 'நான் ஓர் திராவிடன்' என்று பதில் தந்திருக்கிறார், தோழர். அந்த ஆசாமி வேண்டுமென்றே, திராவிடன் என்று கூறியதை ஆதித் திராவிடர் என்று திரித்து எழுதிக்கொண்டு சென்றிருக்கிறார்!

X　X　X

பூந்தமல்லி சிறையில் காங்கிரசின் சுய உருவம், தினசரி தோழர்களுக்கு உணவு தரப்படும் பொழுதெல்லாம், காட்சி, தருகிறதாம்! காங்கிரஸ் ஆட்சி இன்று எவ்வளவு அலங்கோலமாக இருக்கிறதோ அத்தனையும் அந்த உணவில் தென்படுகிறதாம்! அரசியல் கைதிகளை, எந்த ஜனநாயக சர்க்காரும் பொறுப்போடு நடத்தும். 'பொறுப்பு' என்ற வார்த்தைக்குத்தான் மதிப்பே கிடையாதே இந்த ஆட்சியில்!

X　X　X

குன்றத்தூரில் — '26' — கொடுமை நடைபெற்றதல்லவா? அப்போது ஒரு பொறுப்புள்ள அதிகாரி கூர்த்தவத்தாண்டவமாடினாராம்! பாய்ந்து பாய்ந்து கண்ணில் கண்டோரையெல்லாம் தாக்கியிருக்கிறார்!

'எய்! என்னடா நினைத்தீர்கள். நான்உங்களை ஒழிக்கத்தாண்டா இங்கே வந்திருக்கிறேன். என்ன நடக்கிறது பார்த்தாயா? சுட்டுப்பொசுக்கிடுவோம்' என்று கூறிக்கொண்டே பொறுப்புள்ள நமது தோழர்களின் முகத்திலும், மார்பிலும் கையாலே குத்தியிருக்கிறார்! அவர் ஆடிய கூத்துக்களைக் கேட்டாலே கல்லும் கசிந்துருகும்!! அந்த பொறுப்புள்ள 'ஸ்பெஷல் அதிகாரி'யின் பெயருக்குப்பின்னால் 'சர்மா' என்ற வால் ஒட்டிக் கொண்டிருக்கிறது!

X　X　X

குன்றத்தூர் — ஒரு சிற ஊர். எனினும் அங்கு நமது கழகக்கூட்டம் நடந்தால் அமைதி கெட்டுவிடும் என்று கருதி 'எட்டுமுறை சுட்டுப் பொசுக்கி' இப்போது சட்டத்தை நிலைநாட்டியிருக்கிறார்களல்லவா, காங்கிரஸ் சர்க்கார்!

இவ்வளவு வினைவுகளுக்கும் தூண்டுகோலாயிருந்து, துணைபுரிந்தது ஒரு 'மூர்த்தி'யாம்! 'அவர்கள்' கூட்டத்து ஆசாமியாம்!!

அவரே கழகக் கூட்டம், நடைபெறப்போவது அறிந்ததும் '144' வீசச்செய்ய அரும்பாடு பட்டவராம். பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கும் குன்றத்தூர் போலீஸ் அதிகாரி, அவர்! ஏனவே, தமது 'திருக்கைங்கரியம்' முழுவதையும் செய்திருக்கிறார்!!

✻

# மதுரை மாவீரரே, மகத்தான சந்தர்ப்பம்!

## 18-11-50-ல் மத்திய சர்க்கார் மந்திரி மஹ்தாப் வருகிறார்

## கருப்புக் கொடி நாள்

நம்மை நாயினுங் கேடாய் மதிக்கும் டில்லி மந்திரி — **மஹ்தாப்** — நம் மக்கள் வாழ்வை சீர்குலைக்கும் வடநாட்டு மந்திரி

பட்டினியால் பதைக்கிறோம் — உணரவில்லை டில்லி சர்க்கார்

வாருப்பு நீதி பறிபோயிற்று — டில்லி அரசியலமைப்பால்

உரிமை கோருகிறோம் — துப்பாக்கியால் சுடுகிறார்கள்!

துடிக்கிறோம்! தவிக்கிறோம்!! துயரால் மடிகிறோம்!!!

ஆகவே

## காட்ட வாரீர் கருப்புக் கொடி!

நம் அதிருப்தி அனலைக் காட்ட, நமது சக்தியை வெளிப்படுத்த

நமது உரிமை வேட்கையையுணர்த்த, வீரப் பரம்பரையென்பதை காட்ட

## திரண்டு வாரீர், மதுரை நோக்கி!

18—11—50 வீர முழக்கம் எழுப்புவோம்!

திராவிடநாடு திராவிடருக்கே! டில்லி ஆதிபத்தியத்துக்கு அறிவிப்போம்!

அமைதியான முறையில்

## எல்லோரும் காட்டுங்கள், கருப்புக் கொடி!

—மதுரை தி. மு. க.

---

4-ம் பக்கத் தொடர்ச்சி

காட்டவேண்டி, காந்தியாரின் அறிவுரையே வந்துள்ளது—இப்படித்தான்—நாகரீக நாடுகள் எங்கும் நடைபெறுகின்றன. அதே முறையில்தான் நாங்களும் பிடிக்க வந்தோம்." என்றார்.

சப்-இன்ஸ்:- கருப்புக் கொடி பிடிக்க நீங்கள் வரவில்லை; கல்லாலடித்து கலாட்டா செய்தீர்கள்.

S. பால சுப்ர:- நீங்கள் சொல்வது உண்மையல்ல. அத்தகைய கீழ்ச் செயல் செய்வது எங்கள் நோக்கம் அல்ல கழகக் கொள்கையல்ல. நாங்கள் வரும்போதே, எங்களை நீங்களே முழுதாகப் பரிசிலனை செய்து, சிறு கருப்புக் கைக்குட்டை யிருந்தாலும் அதையும் வாங்கிக்கொண்டீர்கள். தங்கள் பரிசிலனையின்போது எங்களிடம் ஒரு கல்லேனும் இருந்ததா? கல் இல்லாது, வெறி கல்லாலடித்தோம் என்பதை எப்படி ஒப்புவது? கல்லாலடித்ததற்கோ, கல்லடியால் எவரேனும் காயப்பட்டதற்கோ, ஆதாரம் ஏதேனும் உண்டா? 24-ந் தேதி காலை நிகழ்ச்சிகளில், கல்லாலடித்தாக எந்தப் பத்திரிகையிலேனும் செய்தி உண்டா? (மேஜிஸ்ட்ரேட்டைப் பார்த்து) நீங்கள் எந்த பத்திரிகையிலேனும் அம்மாதிரியில் செய்தியைக் கண்டீர்களா?

மாஜிஸ:- காயப்பட்டு, ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டது உண்டா?

ச-இன்ஸ:- 'இல்லை'

சுப்ர:- கருப்புக்கொடி பிடிப்பதைத் தடுப்பதற்கு சட்டம் இல்லையென்றால், கலாட்டா செய்ததாக—வேண்டுமென்றே 75 செக்ஷனில் குற்றஞ் சாட்டப்படுவது சரியல்ல; அதை நாங்கள் மறுக்கிறோம். கருப்புக் கொடி பிடித்ததற்காக என்று எந்த அளவு வேண்டுமானாலும் தண்டியுங்கள்; அதை நாங்கள் ஏற்கிறோம்.

மேலும், கல்லாலடித்ததற்கும், கலாட்டா செய்ததற்கும், ஆதாரமான சாட்சி ஏதேனும் சப்-இன்ஸ்பெக்டர் கூறுவாரா?

மாஜிஸ:- (சப்இன்-பார்த்து) சாட்சி ஏதேனும் உண்டா?

'சரி, நீங்கள் இப்படியெல்லாம் நடக்கக் கூடாது நீங்கள் போகலாம்' என்று சொன்னார்.

சப்-இன்:- கான்ஸடேபிள்கள் சாட்சி.

சுப்ர:- எங்களைப் பிடித்தவர்கள் ரிசர்வ் போலிசார்—இவர் அப்போதிருந்த சூழ்நிலையில் என்ன காரணத்தாலோ, கலாட்டா செய்ததாக — 75-செக்ஷனில் வேண்டுமென்றே 'சார்ஜ்' செய்துவிட்டார் உண்மைதானே. (சப இன்ஸ்பெக்டர் மௌனம்)

பாலசுப்ர:- மேலும் கைதியான அன்றிரவே 'கருப்புக்கொடி காட்டவில்லை' என்று சொல்லுங்கள், விடுகிறேன் என்று சப்இன்ஸ்பெக்டர் சொன்னார். அப்போதும் 'அப்படிப் பொய் சொல்லத் தேவையில்லை' என்று சொன்னோம். எங்கள் கொள்கைதான் பெரிது. கருப்புக்கொடி பிடிக்கத்தானே வந்தோம்; அதை நாங்கள் ஏன் மறைக்கவேண்டும்?

மாஜிஸ்ட்ரேட்:- இந்த விளக்கத்தின்பின்னர், சிறிது நேரத்தில் "உங்களை விடுதலை செய்கிறேன்" என்று உத்திரவிட்டார்.

எனவே, பத்துத் தோழர்களில் எட்டுத் தோழர்கள் தண்டிக்கப்படவில்லை.

## விடுதலையும் பேட்டியும்

விடுதலையான தோழர்களில் ஒருவரை மறுநாள் சந்தித்து நமது நிருபர் கேட்டபோது கூறியதாவது:- "நேற்று நாங்கள் விடுவிக்கப்பட்டது சம்பந்தமாகப் பத்திரிகைகளில் நாங்கள் இனி இதுபோல கருப்புக் கொடி காட்டச் செல்வதில்லை என்று உறுதிமொழி கூறி விடுதலையானதாகச் செய்திகள் வந்ததைக் கண்டேன். அது, தவறு. நாங்கள் அப்படியொன்றும் கூறவில்லை. மாஜிஸ்ட்ரேட் அதுபோல எங்களைக் கேட்கவும் இல்லை. கருப்புக்கொடிகாட்ட இனிச் செல்லமாட்டோம் என்று நாங்கள் கூறி வெளியே வந்ததாக பத்திரிகைகளில் வெளிவந்திருப்பது பித்தலாட்டமானதாகும்." என்று கூறினர்.

---

## திருத்தம்

கடந்த வாரம் 2-ம்பக்கத்தில வெளியிடப்பட்ட தி. மு. க. கழகசெயற்குழு கூட்டத்துக்கு வந்திருந்த உறுப்பினர்களின் வரிசையில சலகண்டபுரம் தோழர் ப. கண்ணன் பெயர் விடப்பட்டுவிட்டது. சேர்த்துக்கொள்ளவேண்டுகிறோம். (ஆ-ர்)

## வேண்டுகோள்

நடைபெற்ற சிவகங்கை மாநாட்டிற்கு, குறிப்பாக டிக்கெட்டுகள் பெற்று தக்க காலத்தில் தொகை தந்து உதவிய எனது உயிர்த் தோழர்கள் அனைவருக்கும் எனது மட்டிலா மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாநாடு சிறப்படையச் செய்த சிற்பிகளும் அவர்களே!

மாநாட்டிற்கு தொகை தொகையாக முன் கூட்டியே அன்புடன் அளித்த நன்கொடையாளர்களின் பேருதவிக்கும் எனது மட்டற்ற நன்றி!

மேலும், அவசரமாக என்னைக்காணமுடியாது ஊர் சென்ற தோழர்களில் சிலர் தங்கள் தங்களிடம் தங்கியிருக்கும் மீதமுள்ள டிக்கெட்டுகளை விவரத்தோடு விரைவில் அனுப்பித் தந்து மாநாட்டின் கணக்கு விளக்கப் பட்டியல் வெளியிடவேண்டிய பேருதவியை அளிக்குமாறு வேண்டுகிறேன்.

இராம. சுப்பையா,
செயலாளன்

இராமநாதபுர மாவட்ட தி. மு. க. முதலாவது மாநாடு.

## உடுமலையில் போலீஸ் கெடுபிடி

அண்மையில் (27—10—50) குன்றத்தூரில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து நகரில் முக்கியமான இடங்களில் தொங்கவிடப்பட்டிருந்த அட்டை பிரசுரங்களை போலீஸார் முன் எச்சரிக்கை விடுக்காமல் அவிழ்த்துக்கொண்டு சென்றுவிட்டனர். அதுபற்றிய காரணங்கள் இதுவரைக்கும் அறிவிக்கப்படவில்லை. (நி)

## நடக்க இருப்பவை

சென்னை: 3-வது வட்ட தி. மு. கழக கமிட்டிக் கூட்டம் 12—11—50 அன்று No 819 A ரோட் P. ராமசாமி இல்லத்தில் நடைபெறும் முக்கிய செய்திகள் குறித்து ஆலோசிக்கப்பட வேண்டியிருப்பதால் யாவரையும் வரவேண்டுகிறேன் என தோழர் எஸ் பி. திராவிடமணி அறிவிக்கிறார்.

Edited Printed & Published by C. N. Annadurai M. A at Dravida Nadu" Press 95. Tirukkachinambi Street Kancheepuram